செய்தித்தாளாகப் பதிவு செய்யப்பட்டது.

கண்ணகி

தேசிய தீவிர மாதமிருமுறை.

எல்லா அதிகாரமும் மக்களுக்கே — நேதாஜி.

ஒலி 4 | மதுரை, மன்மத-ஐப்பசி 1 (17-10-55) | அலை 10

5 ஏக்கர் ஐயாக்கள் இளைப்பாறட்டும்

●மதுரை நகரசபைத் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

மக்கள் தங்கள் பகுத்தறியும் சக்தியைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும்,

இதர நகரங்களில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்திருப்பதையும், ஒரே ஒரு ஓட்டு வாங்கிய கேவலத்தையும் மக்கள் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்:

மக்கள் எண்ணத்தின் கருவூலமாக இருந்த காங்கிரஸ் இன்று நியாயப் புரட்டர்களின் சாவடியாகிவிட்டது.

நேரு ஒருவரை வைத்து புதுக்காங்கிரஸ் வேடதாரிகள் மக்கள் உரிமையை சர்வ பாத்தியதையோடு மேய்ந்து மொட்டையடித்துக்கொண்டிருக்கிறார்கள்! ஒரு உதாரணம் :

●மதுரை நகரில் நமது அருமைத் தாய்மார்கள் போதிய தண்ணீர்க்குழாய்களின்றி குழாயடிகளில் குடங்களுடன் தவமிருக்கிறார்கள்—சில இடங்களில் எல்லோருமே அல்லிராணிகளாகி அடிதடிகளில் இறங்கிவிடுவதையும் காண்கிறோம்.

போதிய தண்ணீர் வசதி இல்லாமையால் புதிதாக எந்த வீட்டிற்கும் தண்ணீர் குழாய்களுக்கு

[2-ம் பக்கம் பார்க்க]

இந்தியாவின் முதல் பிரதமருக்கு 2-வது பிரதமர் அவமரியாதை!

SEP 1956

● நேதாஜியின் மரணச் செய்தியிலுள்ள மர்மங்களைத் துருவும்பொருட்டு, அதிகாரப்பற்றற்ற முறையில் ஒரு கமிட்டி அமைப்பதைத் தாம் ஆக்ஷேபிக்கப்போவதில்லை என்று நேரு கூறி இருக்கிறார்—ஷாநவாஸ்கானிடம்!

அந்தக் கமிட்டியில் நேதாஜியின் குடும்பத்தாரில் ஒருவரும் சேர்த்துக்கொள்ளப்படுவாராம்,

இதெல்லாம் என்ன என்பதே விளங்கவில்லை.

● அதிகாரப்பற்றற்ற கமிட்டிக்கு நேருவின் ஆதரவோ, ஆக்ஷேபமோ ஏன்?

அதிகாரப்பற்றற்ற கமிட்டி அமைப்பதற்கு சரிசொல்கிற நேரு, **அதிகார பூர்வமாள கமிட்டி அமைக்க** ஏற்பாடுசெய்தால் கௌரவம் கரைந்துவிடுமா? அன்றி வெள்ளையர் பகை ஏற்படுமா?

இந்தியக் காங்கிரசின் பரிபூரண சுதந்திர லட்சியத்தை ஈடேற்றுவதற்காகத்தான் நேதாஜி இந்தியாவை விட்டு வெளியேறினார்—அரசாங்கம் அமைத்தார்—அதை அன்று 9 அரசாங்கங்கள் அங்கீகரித்தன—அதே ஆஸாத் ஹிந்த் அரசாங்கத்தை நேருவும் ஆரம்பத்தில் ஆதரித்துத்தான், ஐ. என். ஏ. விசாரணைக்கு வக்கீல் கோட்டை மாட்டிக்கொண்டு நீதி மன்றம் சென்றார்.

● இந்த முறைப்படி பார்க்கிறபோது, நேதாஜி, நேரு சர்க்காருக்கு முன்பு, இந்தியர்களுக்காக உண்டான ஒரு அரசாங்கத்திற்கு தலைவர்—வெளிநாட்டு மந்திரி—யுத்த மந்திரி,

[2-ம் பக்கம் பார்க்க]

[1ம் பக்கம் 5 ஏக்கர் தொடர்ச்சி)

அனுமதிப்பதில்லை என்ற சட்டம் ஒன்று இருப்பதை அனுசரித்து மக்கள் கஷ்டத்தைச் சகித்துக் கொள்கிறார்கள்.

ஆனால் பொது மக்கள் போதாமையால் தவிப்பதைத் தவிக்க விட்டு விட்டு, புதிய குழாய்களுக்கு அனுமதியில்லை என்ற சட்டத்தையும் உறங்கப் போட்டுவிட்டு, எப்படியோ 100 குழாய்களுக்கு ஆர்டர் வாங்கி, அந்தக் குழாய்களை நகராசபைக் காங்கிரஸ் தலைவரும், கவுன்சிலர்களும், அவர்களுக்கு வேண்டியவர்களுமாகப் பகிர்ந்துகொண்டிருக்கும் பச்சை மோசடி சமீபத்தில் மதுரையில் நடைபெற்றிருப்பதாக அறிகிறோம்.

மக்களின் தேவை தெருவிலே காலிக்குடங்களாகக் காட்சியளிக்கையில், காங்கிரஸ்காரரின் வீடுகளிலும், அவர்களுக்கு வேண்டியவர்களின் வீடுகளிலும் புதிய குழாய்கள் அலங்கரிக்கின்றன.

இவ்வளவு துணிச்சலான காரியத்தைக் காங்கிரஸ்காரர்களால்தான் நெஞ்சில் ஈரமின்றிச் செய்யமுடியும், ஏனெனில், மக்கள் பழைய காங்கிரசின் புனிதத்தன்மையை மதித்து வாக்களிப்பதால்!

● காங்கிரஸ் மக்கள் சொத்து; இன்று அது, மக்களின் விரோதிகளிடம் சிக்கிவிட்டது, அதை மீட்டிப் புனிதப்படுத்தவேண்டும். அதற்குள்ள ஒரே வழி, வருகிற நகராசபைத் தேர்தலில் காங்கிரசுப் பெட்டிகளைக் காலியாகப் போடுவது ஒன்றுதான்!

ஒரு கட்சியிடம் நகரசபை ஆட்சியைச் சிக்கவிட்டதின் பலன் அனுபவித்தாகிவிட்டது. இனியும் அனுமதித்தால், தெருக்குழாய்களெல்லாம் இரவோடிரவாய் காங்கிரசுக்காரர்களின் கக்கூஸ்களுக்குப் போய்விட்டாலும் அதிசயிப்பதற்கில்லை.

ஆகவே ஆண்டதுபோதும், ஐந்து ஏக்கர் ஐயாக்களே! கொஞ்சம் இளைப்பாருங்கள் என்று சொல்லி, மக்கள் தமது வாக்குகளை சுயேச்சையர்களுக்குப் போடுங்கள். அவர்கள் நிர்வாகத்தையும் ஒரு தடவை அனுபவித்துப்பார்ப்போம், ஆனால் சுயேச்சையர்கள் நிச்சயம் அநீதி புரியமாட்டார்கள்—அது அவர்களால் முடியவும் முடியாது. இன்றைய நிலையில்

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

அவர்பற்றிய செய்தியை விசாரிக்க. **பிந்திப் பிறந்த** இந்திய சர்க்காரின் பிரதமரும், வெளிநாட்டு மந்திரியுமான நேருவல்லவா விசாரணைக் கமிட்டி அமைத்துத் தலைமை தாங்கி நடத்தவேண்டும்? இதுதானே அரசாங்க நீதி?

● தாம் வகிக்கும் பிரதமர் பதவியையும், வெளிநாட்டு மந்திரி பதவியையும்விட நேதாஜிவகித்த தலைமைப் பதவியும் வெளிநாட்டு மந்திரிப் பதவியும் தாழ்ந்ததென்று நேரு மதிப்பிடுகிறாரா?

காந்தியடிகளின் மரணத்தை நேரு சர்க்கார்தானே வாதியாக நின்று வழக்காடிற்று ?

பாண்டுங் மகாநாட்டுக்குச் சென்ற இந்திய விமானத்தை இடையிலே விபத்தில் வீழ்த்திய நிகழ்ச்சியை விசாரிக்க ஏற்பாடு செய்தது இந்திய சர்க்காரா? அன்றி அதிகாரப் பற்றற்ற இந்தியக் கமிட்டியா ?

● இதை எல்லாம்விட அதிகாரப் பற்றற்ற ஒரு சிறு கமிட்டியின் மூலம் விசாரிக்கும் அளவுக்கு நேதாஜியின் கண்ணியம் நேருவின் கண்களுக்குத் தாழ்மையாகப் படுகிறதா ?

1857-க்குப் பிறகு இந்திய அரசாங்கம் என்ற ஒன்று **முதன் முதலில்** அமைந்து **அதற்குப் பிரதமத்வம் வகித்தது நேதாஜிதான்.** அதற்குப் பின் **இரண்டாவது** பிரதமர்தான் நேரு என்றுதானே உண்மைச் சரித்திராசிரியன் எழுதுவான் ?

● **முதற் பிரதமரின் மரணச் செய்தி நிஜமா?**—பொய்யா என்பதை விசாரிக்க, **இரண்டாவது பிரதமர்,** அதிகாரப்பற்றற்ற கமிட்டியை அனுமதிப்பது அருவருப்பான வெட்கக் கேடில்லையா ?

கெட்டது செய்யாதவர்கள்தான் தேவை.

பிரச்சார லாவண்ணங்களில் லயித்த மக்கள் இனியும் தவறிவிடாமல், கண்டிப்பாய் ஒவ்வொருவரும் தவறாமல் சுயேச்சை அபேட்சகர்களையே ஆதரிக்க வேண்டும்—வேண்டுகிறோம்.

தவிர.

● அதிகாரப்பற்றற்ற அவ்விசாரணைக் கமிட்டியில் **நேதாஜியின் குடும்பத்தாரில்** ஒருவரும் சேர்த்துக்கொள்ளப்படுவது குறித்து ஆலோசனை கூறப்படுவது **சகிக்க முடியாத மோசடியாகும்.**

நேதாஜி விஷயத்தில் அவரது குடும்பத்தாரைச் சம்பந்தப்படுத்துவது இந்திய தேசியத்தையே தனிப்படுத்தும் கொடுமையாகும்!

நேதாஜி பிரச்சினை முழுக்க, முழுக்க இந்தியாவின்—இந்திய மக்களின் சொந்தப் பிரச்சினை, இதில் அவரது குடும்பத்தாரைச் சம்பந்தப்படுத்துவது, நேதாஜி பிரச்சினையை, ஒரு தனிப்பட்ட குடும்பப் பிரச்சினையாக்கி அதை இந்திய தேசிய—இந்திய அரசியல் பிரச்சினையிலிருந்து விலக்குவதற்குச்செய்யும் அநாகரீகமான சூழ்ச்சி என்றே கருதுகிறோம்.

நேருஜி எல்லாம் இந்திய அரசியல் வாதியாக இயங்குகிறபோது, இந்திய அரசியலுக்கே **சாமுத்ரிகம் வகுத்து அதை அமுலாக்கிக் காட்டிய நேதாஜியை** இந்திய அரசியல் துறையிலிருந்து ஒதுக்கிப்பேச நினைப்பதே அடாது—நினைப்பதே அடாது என்ற ஒரு சங்கதியை நேரு செய்யவே துணிகிறார்! இதற்கு என்ன பெயர் கொடுப்பதோ தெரியவில்லை.

இதெல்லாம் தேசியத்தை ஆபாசப் படுத்தும் செய்கை !

நன்றி மறவாத் தன்மை ஏதேனும் கொஞ்ச நஞ்சம் இருந்தால், நேதாஜி மரணச் செய்தியில் நேரு சர்க்கார் கண்ணியமான முறையில் அரசாங்க பூர்வமாய்ச் செய்யவேண்டியதைச் செய்யட்டும். அல்லாத போனால் பேசாமல் விட்டுவிடுவது மகத்தான சேவை!

நேதாஜி ஒரு சாதாரண மனிதரல்ல !

அரசியலுக்கு-அவர் இந்தியமக்கள் மட்டுமன்றி உலக மக்களின்—உலகத் தலைவர்களின்—ஒரு மித்த அந்தரங்க ஆதர்ச சக்தியை ஆக்ரமித்துக் கொண்ட அதிமேதை !

ஆன்மீகத்துக்கு—அவர் ஒரு அநுபூதி பெற்ற மா மகான்!

(8-பி பக்கம் பார்க்க)

நேரு சர்க்காரின் உயிர் நேதாஜியின் மரணச்செய்தியில் தான் இருக்கிறதா?

உண்மைக்கு வேடு கட்டும் நேரு அவர்களுக்கு ஒரு விண்ணப்பம்!

● நேதாஜி மரணச் செய்தி குறித்து செப்டம்பர் 29ல் டில்லி மக்கள் சபையில் திரு. காமத்துக்கும் பிரதமர் நேருவுக்குமிடையே வாக்கு வாதம் நடைபெற்றது.

அதில் நேருவின் பதிலை மட்டும் திரித்தும், முறித்தும் சில தமிழ்ப் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. ஆனல் காமத் கேட்ட கேள்விகளை எந்தப் பத்திரிகையும் அப்படியே பிரசுரிக்கவில்லை.

பல கேள்வி—பதில்கள் ஒருபுறமிருக்க நேதாஜியின் அஸ்தி எனச் சொல்லப்பட்டது குறித்து திரு. காமத் கேட்ட கேள்வி முக்கியமான பகுதி. அது வருமாறு:

காமத்: டோக்கியோவில் இருப்பதாகச் சொல்லப்படும் நேதாஜியின் அஸ்தியை இந்தியாவுக்குக் கொண்டுவருவதுபற்றி தாங்கள்முன்பு கூறியதை திரும்பவும் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். நேதாஜியின் அஸ்தி சம்பந்தப்பட்ட விஷயம் அவருடைய குடும்பத்தாரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். அதை இந்தியாவுக்குக் கொண்டு வரலாமா—கூடாதாஎன்பதை நேதாஜியின் குடும்பத்தார்தான்முடிவுகட்ட வேண்டும் என்று முன்பு கூறினீர்கள்,

இது தவிர, நேதாஜி அரசாங்க மந்திரிகளில் ஒருவரான திரு. எஸ்.ஏ. ஐயர் டோக்கியோ சென்றுவந்தபிறகு நேதாஜி மரணச் செய்தியைஉறுதிப்படுத்திச் சமர்ப்பித்த அறிக்கைபற்றி தாங்கள் 1951 மார்ச் மாதத்தில் குறிப்பிடும்போது, ஐயரின் அறிக்கையில் நான் திருப்திப்பட முடியவில்லை என்றும், எனவே நேதாஜிபற்றி ஐயரின் அறிக்கையே முடிவானதல்ல என்றும் கூறினீர்கள். நேதாஜி மரணச் செய்தியிலும், அஸ்தியிலும் தாங்கள் 1951ல் நம்பிக்கை வைக்கவில்லை. தாங்கள் நம்பாதது எதுவோ அதுதான் அரசாங்கக் கொள்கையாகவுமிருக்க வேண்டுமெனக் கருதுகிறேன்.

அவ்வாருனல் 1951ல் தாங்கள் கொண்டிருந்த கொள்கையைத்தான் தங்கள் அரசாங்கம் இன்றுவரை கொண்டிருக்கிறதா? 1951ல் நேதாஜியின் அஸ்தியில் நம்பிக்கைகொள்ளாத தாங்கள் இன்று நேதாஜி மரணத்தில் என்னளவில் சந்தேகங்கொள்ளவில்லைஎன்று கூறுகிறீர்கள். முன்பு தாங்கள் நம்பாததற்கும், இன்று நம்புவதற்கும் ஏதேனும் ஆதாரமுண்டா? நேதாஜியின் அஸ்தியை இந்தியாவுக்குக் கொண்டுவரும் பிரச்சினை நேதாஜியின் குடும்பப்பிரச்சினையா? அன்றி இந்திய தேசத்தின் பிரச்சினையா? இந்திய அரசாங்கம் இப்பிரச்சினையை எப்படிக் கருதுகிறது? ஏன் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை?

நேருவின் பதில்:

நேதாஜியின் அஸ்தி எனச் சொல்லப்படுவதை இந்தியாவுக்குக்கொண்டு வரவேண்டியது சம்பந்தமாய் அவருடைய குடும்பத்தாரின் அனுமதியும் முடிவும் வேண்டுமென்றுதான்சொன்னேன். நேதாஜி அஸ்திபற்றிய விஷயம் முழுதும் அவரது குடும்பத்தாருக்கு மட்டுமே சொந்தமானது என்று நான் கருதவில்லை. அது இந்த

தேசம் சம்பந்தப்பட்ட விஷயமுங் கூடத்தான் என்பதில் நான் மாறுபடவில்லை. மேலும் நேதாஜியின் மரணச் செய்தியில் மக்கள் வட்டாரத்திற் சிலர் நம்பிக்கை வைக்கவில்லை என்பது கனம் மெம்பருக்குத் தெரியும். அதோடு நேதாஜியின் குடும்பத்தாரும் நம்பவில்லை, இதனுல் பிரச்சினை சிக்கலாகிவிட்டதால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியவில்லை நடவடிக்கைக்குரிய பிரச்சினையே ஒரு முடிவுக்கு வரமுடியாத ஐயப்பாட்டில் இருக்கும்போது எப்படி நடவடிக்கை எடுப்பது?

எஸ். எ. ஐயர் சமர்ப்பித்த அறிக்கையை மெம்பர் குறிப்பிட்டார். ஆனுல் நான் அதுபற்றி அன்றுஎன்ன சொன்னேன் என்பது நினைவில்லை. அது எதுவாக இருந்தாலும் என் சொந்த முறையில் நேதாஜியின் மரணச் செய்தியில் சந்தேகப்பட எதுவுமிருப்பதாகக் கருதவில்லை. அவர் எப்படி மரணமடைந்தார் என்பதில் ஒருக்கால் மாறுபாடுகள் இருந்தாலும் அவர் மரணமடைந்துவிட்டார என்பதில் நான் சந்தேகங்கொள்ள முடியவில்லை. அது விசாரணையின்மூலம் தான் தெரியவேண்டும். அத்தகைய விசாரணையை ஜப்பான் அரசாங்கம் தான் மேற்கொள்ள வேண்டும். மேற்கொண்டால் இந்திய சர்க்கார் வேண்டிய உதவிகளைச் செய்யத் தவருது. இவ்விசாரணை விவகாரம் ஜப்பான் சர்க்காரின் கையில்தானிருக்கிறது. விசாரணைக் கமிட்டி அமைக்கும்படி நாம் ஜப்பான் சர்க்காரைக் கட்டாயப்படுத்த முடியாது. எனெனில் சம்பவம் நடந்தது ஜப்பான் பகுதியில். மேலும், சம்பந்தப்பட்ட சாட்சிகள் ஜப்பான் அதிகாரிகளாகவோ அன்றி அரசாங்கத் தொடர்பு கொண்டவர்களாகவோ இருக்கிறுர்கள். ஆகவே ஜப்பான் அரசாங்கம்தான் விசாரணைக் கமிட்டி அமைத்து விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். நாம் அதற்கு உதவி புரிவதைத் தவிர வேறெதையும் செய்வதற்கில்லை.

● திரு. காமத்தின் கேள்வியையும் நேருவின் பதிலையும் படித்துவிட்டீர்கள்.

திரு. காமத்தின் கேள்வியிலுள்ள பொறுப்புத் தன்மை, நேருவின் பதிலில் எவ்வளவுவிரைவில் பொறுப்பீனமாகிவிட்டிருக்கிறது என்பதையும் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

தேசத்தின் மரியாதையைக் காத்துக்கொடுத்த—காத்து நிற்கிற ஒரு உன்னதத் தலைவர்பற்றிய விஷயத்தை வைத்துக்கொண்டு நேரு சர்க்கார் எப்படி விளையாடுகிறது என்பதையும் கவனியுங்கள்.

நேதாஜி மரணமடைந்தது ஜப்பான் பிரதேசத்திலாம்—ஆகவே அது பற்றிய விசாரணைக்கு ஜப்பான் சர்க்கார்தான் ஏற்பாடு செய்யவேண்டுமாம்—இவர் உதவி மட்டும் அதுவும் மனப்பூர்வமாய்ச் செய்வாராம்—நேருப் பண்டிதர் கூறுகிறுர்.

மிகப் பொறுப்பான—பெரிய பதவியிலிருந்துகொண்டு இவ்வளவுபொறுப்பற்ற பதிலைக் கொடுக்கும் ஒருவர் எந்தத்தலைமுறையிலும் இருந்ததாக சரித்திரம் அறிமுகப்படுத்தியதில்லை, ஆனுல், இந்தத் தலைமுறையில் நேரு இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறேம். காணமற்போன உடைமையைக் கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டியது உடைமையைப் பறிகொடுத்தவனு? அன்றி பக்கத்திலிருந்தவனு?

பறிகொடுத்தவன் முயலமாட்டான் பக்கத்திலிருந்தவன்தான் முயலவேண்டும் என்ற ஒரு விசித்திரமான சித்தாந்தத்தையே உருவாக்குகிறது நேருவின் பதில்.

நேதாஜி யாருடைய உடைமை?

அவரை இன்று இழந்திருப்பது இந்தியாவா? ஜப்பானு?

நேதாஜி மரணச்செய்தியை விசாரித்து இந்திய சர்க்காரின் சன்னதியில் வந்து ஒப்புவிக்க வேண்டிய அவசியம் ஜப்பானுக்கு என்ன வந்தது?

அந்த விசாரணையின்மூலம் வெளியாகும் உண்மைகளால் லாபமடைவது ஜப்பானு? இந்தியாவா?

நேதாஜி பட்டபாட்டிலிருந்தும் அவருக்காக அவர் சார்பில் நின்று உயிரையும், உடைமைகளையும் பறிகொடுத்த பல்லாயிரம் மாணிக்கங்களின் புதைகுழிகளிலிருந்தும் உருவான சுதந்திரத்தை இன்று படாடோபத்தோடு அநுபவிப்பது நேருவா? அன்றி ஜப்பான் பிரதமர் ஹடோயாமாவா?

இவைகளையெல்லாம் சாதாரண ஒரு நன்றிமறந்த மனிதன் மாதிரி பாரதரத்னம்—ஆசியஜோதி—நேருவே, துணிந்து, ஜப்பான் அரசாங்கம்தான் விசாரிக்க வேண்டும் என்று கூறினுல் அவருடைய நெஞ்சில், சர்ச்சில், மௌண்பாட்டன் வகையருவின் புத்தி எவ்வளவு உறைந்திருக்கவேண்டும் என்பதை மக்களே தீர்மானித்துக்கொள்ளட்டும்.

● ஜப்பான் சர்க்கார் விசாரணைக்கு ஏற்பாடு செய்தால், நேரு சர்க்கார் உதவிபுரியுமாம்-இது ஒரு வேடிக்கை!

ஜப்பான் பிராந்தியத்தில் மரணமடைந்ததாகச் சொல்லப்படும் நேதாஜிபற்றிய சம்பவத்தில் நேரு சர்க்கார் உதவிபுரிய என்ன வைத்திருக்கிறது? ஒன்றுமே தெரியாது என்று ஒருமுறை கூறிவிட்டு மறுமுறை விசாரணைக்கு உதவுகிறேம் என்ருல் உதவ என்ன இருக்கிறது? கையிலிருக்கிற பொய், புனை சுருட்டுகளை வேண்டுமானுல் தமது பிரிட்டானியப் பழக்க வழக்கப்படி உருட்டித் திரட்டி இடையிலே விட்டு விசாரணையைக் குழப்பலாம்—கெடுக்கலாம். இதைத் தவிர நேரு சர்க்கார் நேதாஜிபற்றிய ஜப்பானின் விசாரணைக்கு என்ன உதவி செய்யமுடியும்? நேரு பிரதமராக இருக்கிறுர் என்பதற்காக அவருடைய வாயிலிருந்து விழும் எல்லாவற்றிற்குமே அர்த்த வீக்கம்இருக்கும் போலும்! கண்ருவி.

வெண் சங்கு
ட்ரேட் மார்க்
REGD No. 13817.
சீயக்காய்தூள்
எண்ணெய் குளிப்பிற்கு மேன்மையானது என்று
ஆற்றோரம் குளத்தோரம், கிணற்றோரம், குழாய்ஓரம் எங்கும் இதே பேச்சுத் தான்.
எஸ். உரிமையாளர்:
பெத்தண்ண நாடார்
தஞ்சாவூர். போன் நிர். 108

இது நிற்க,

நேதாஜியின் மரணத்தை அல்ல, மரணச் செய்தியை நேரு நம்புகிறார். ஆகவே இந்த நம்பிக்கைதான் அவரது அரசாங்கபூர்வமானதாகவும் இருக்கவேண்டும்- அவ்வாறானால், ஆகஸ்ட் 18ல் நேதாஜி இறந்ததாகச் சொல்லப்படும் தினத்தை ஜப்பான் அரசாங்கம் நேதாஜியின் நினைவு நாளாகக் கொண்டாடும்போது நேதாஜியின் மரணச் செய்தியை நம்புகிற நேருவும், அவரது சர்க்காரும் ஏன் கொண்டாடவில்லை? கொண்டாடக் கூடாதா? கொண்டாடும் அளவுக்கு இந்த தேசத்திற்காக நேதாஜி எதுவும் செய்யவில்லையா?

நேதாஜி அவர் பிறந்த இந்த மண்ணிற்காகச் செய்தது இன்று பிரகாசத்திற்கு வாராதபோனாலும், அவர், நமது பாரதரத்னம் நேரு. பிரதம மந்திரி பீடத்தில் ஏறுவதற்காகவாவது தமது உழைப்பை எல்லாம் உரமாகக் கொடுத்திருக்கிறாரே அதற்காகவாவது இந்த நேரு, நேதாஜியின் நினைவுநாளைக் கொண்டாடக் கூடாதா? தேசியச் சபலம்—கேட்கிறோம்,

நேதாஜி இந்தியாவிலிருந்து மரணப் பாதையின்மூலம் வெளியேறி, ஐ. என். ஏயை உண்டாக்கி, அது அரக்கான் முனையில் அடிவைத்த அதிர்ச்சிக்கே ஆற்றமாட்டாமல் கல்கத்தாவிலிருந்த மௌண்பேட்டன் தலைமைக் காரியாலயம் கண்டிக்குத் தாவிற்று. அதில்தான் வெள்ளையாட்சி நேதாஜியை இந்தியாவின் எதிர்கால சக்தியோடு சம்பந்தப்படுத்திப் பார்த்து, இனி இந்தியாவைஆள முடியாது என்ற திட்டத்திற்கு வந்தது. அதே ஐ. என். ஏ. என்ற ஒன்று இருந்ததால்தான் வெள்ளை ஆட்சி அன்று செங்கோட்டையில் விசாரணை நடத்திற்று அவ்விசாரணை நடந்திராவிட்டால் நேருவும் சகாக்களும் அதில் ஐ. என். ஏ. சார்பில் வாதிட்டிருக்க மாட்டார்கள். வாதிடுவதற்கான வாய்ப்பு அன்று ஐ. என். ஏ. விசாரணையின்மூலம் கிடைத்திராவிட்டால் இன்று காங்கிரஸ் கட்சி கடந்தகாலக் கதையாகி இருக்கும்!

இதற்கு இடமின்றி காங்கிரசை உயிர்க்க வைத்ததற்காகவாவது நேதாஜி நினைவுநாளைக் கொண்டாடக்கூடாதா?

கலங்கும் கண்களுடன் நேருவைக் கேட்கிறோம். கேட்பது போதாதென்றால் கரமேந்திக் கெஞ்சவும் முன் வருகிறோம்!

நேதாஜி நாளை ஜப்பான் சர்க்கார் கொண்டாட, நேரு சர்க்கார் கொண்டாடவில்லையாதலால், அவர் நேதாஜி மரணச் செய்தியை இன்னும் நம்பவில்லை; அல்லது நேதாஜியை அவர் மதிக்கவில்லை என்றுதானே கொள்ள வேண்டும்? நேரு சர்க்காரைக் கேட்கிறோம்.

இதுவும் போக,

நேதாஜி அஸ்தி என்று சொல்லப்படுகிற சாம்பலை டோக்கியோவிலிருந்து அவர் பிறந்த இந்தியாவுக்குக் கொண்டுவர, அவருடைய குடும்பத்தார்தான் இசையவேண்டும்என்று கூறுகிற நேரு, எவ்வளவு எளிதாய் பொறுப்பிலிருந்து விலகுகிறார் என்பதையும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நேதாஜி பிறந்தது ஒன்றுதான் அவருடைய பெற்றோருக்கு!

அதன்பிறகு அவர் படித்தது, பாடுபட்டது, சிறை சென்றது, தலை பிளக்க அடிபட்டது, ராஷ்ட்ரபதியானது, இந்தியாவைவிட்டு வெளியேறியது, மரணபயம் நிறைந்த பல செயல்களை மேற்கொண்டது, பெற்றோர்—உற்றோரை மறந்தது, வருவாயை இழந்தது, முடிவில் சாகாப் புகழ்பெற்று இந்திய சமுதாயத்திற்கு வாழ்வளிப்பது எல்லாம் அவர் குடும்பத்திற்காகவா? அன்றி இந்திய தேசியத்திற்காகவா?

நேதாஜியின் தியாகத்தில் ஒரு சிறு பகுதிகூட அவரது குடும்பத்தாருக்கு உதவவில்லை. அவர் தேறி, அத்தேர்ச்சியை தேசத்திற்கு நிவேதித்தார்.

நேருவும் அவரது குடும்பத்தாரும் அவரை அறிந்தவர் தெரிந்தவர் அவ்வளவு பேர்களும் நேரு செய்த சேவைக்குப் பிரதிப்பயனாக சுதந்திர இந்தியாவின் அதிகாரத்தைப் பல முறைகளால் சுகிக்கிறார்கள்.

நேருவுக்கு மேல் எவ்வளவோ மகத்தான பல சேவைகளையும் தியாகத்தையும் செய்தவர் நேதாஜி.

அவரது குடும்பத்தாரில் எத்தனை பேருக்கு இந்த நேரு சர்க்கார் உத்தியோக உதவியோ பிற உதவியோ செய்திருக்கிறது? விரல் மடக்க முடியுமா?

உதவிக்குப் பதிலாக அவர் அண்ணன் சரத்பாபுவை அவர் தொகுதியில் ஒரு எம். எல். ஏ. யாக வருவதற்குக்கூட நேரு—படேல் கூட்டணி கல்கத்தாவில் முகாம்போட்டு எதிர்வேலைசெய்தது. எனினும் தியாகத்

வெட்கப்படாத மந்திரி!

ரயில் வண்டிகள் போதாமையால், பிரயாணிகள் ரயில் வண்டிகளின் கூரைமேல்கூட பிரயாணம் செய்கிறார்களாம்-ரயில்வேமந்திரி லால்பகதூர் சாஸ்திரியே கூறுகிறார்.

கட்டணம் வாங்கி லாபங் காட்டிப் பெருமைப் பட்டுக் கொள்ளத் தெரிகிற மந்திரிக்கு, வாங்கிய கட்டணத்திற்கு வசதிசெய்து கொடுக்கத் தெரியவில்லை.

காசைக் கொடுத்துக் கூரைமேல் பிரயாணம் செய்து உயிரைவிடும் மக்களைப் பற்றி, அவருக்கென்ன கவலை!

பண பட்ஜெட் லாபமாகவும், மனிதத் தொகை பட்ஜெட் நஷ்டமாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புகிற மந்திரி, கூரைமேல் பிரயாணம் செய்கிறார்கள் என்று சொல்ல வெட்கப்படவா போகிறார்?

V.K
ஸன்பிளவர் சோப்
சலவைக்குச் சிறந்தது !
ஸன் பிளவர் சோப்
வாங்கி உபயோகியுங்கள்
வி. கே. சன்ஸ்
[பி. ஐ. டபிள்யு. லிமிடெட்]
80, மேலாவணி மூல வீதி, மதுரை
எங்கும் ஏஜண்டுகள் தேவை !

தழும்பேறிய நேதாஜியின் அண்ணனை நேரு—படேல் அதிகாரக் கூட்டணி அணுகக்கூட முடியவில்லை.

இன்று நேதாஜியின் குடும்பத்தார் பலர் வேலையின்றி இருக்கிறார்கள். ஆனால் நேரு சர்க்காரிடம் வேலைக்கு மனுப்போடும் நிலையில் இல்லை.

மாபெரும் தியாகியின் உறவினராயிற்றே என்று நேதாஜியின் உறவினர் எவருக்கேனும் நேரு வேலை கொடுத்து உதவியிருக்கிறாரா? ஒன்றுமே இல்லை. இந்திய சுதந்திரத்திற்காக, தேசபக்தி மேலீட்டால் உயிர் கொடுக்க முன்வந்தவர்கள் என்று தாமே முன்னின்று வழக்காடி சட்டபூர்வமாக்கப்பட்ட ஐ. என். ஏ. வீரர்களையே தெருவிலே விட்டுவிட்ட நேருவை சரித்திரம் வரிவளர்த்துக் காட்டாமல் விடாது, அதே சமயம் நேருவின் குடும்பம், உறவினர் மட்டுமின்றி, அவருடைய அபிமான நிழல் பட்ட வட்டாரமே இன்று இந்திய சர்க்கார் அதிகாரத்தை தாம்பத்ய உரிமையோடு பிரித்துக்கொண்டு அனுபவிக்கின்றனர். அனுபவிக்கட்டும். ஆனால் தன் உழைப்பின்மூலம் தனது குடும்பத்திற்கு எதையுமே உதவாத நேதாஜியின் சாம்பல் என்று சொல்லப்படுகிற அஸ்தியைக் கூட இங்கு கொண்டுவருகிற பிரச்சினையை அவரது குடும்பத்தாரின் பொறுப்புக்கு விடுவதென்றால் அது மனித நெஞ்சால் நினைப்பதற்கே அருவருப்பாக இருக்கிறது!

உழைப்பு முழுவதையுமே தேசத்திற்காகச் செலவிட்ட ஒருவரின் பிடி சாம்பலை அவரது குடும்பத்தார் எப்படித்தான் ஏற்றுக்கொள்வார்கள்? தேசமல்லவா ஏற்கவேண்டும்? ஏற்றுக்கொள்ளும்படி கேட்க நேருவின் தேசிய நெஞ்சு எப்படித்தான் ஒவ்விற்றோ!

அப்படியும் நேரு விடவில்லை. நேதாஜியின் சாம்பல் என்று சொல்லப்படுவதை இந்தியாவுக்குக்கொண்டு வருவது சம்பந்தமாய் தங்கள் முடிவை அறிவிக்கும்படி சரத்பாபுவின் மனைவிக்கு நேரு ஒரு கடிதம் எழுதினாராம். அதற்கு அந்த அம்மை,

நேதாஜியின் அஸ்திதான் அது என்பதில் தங்களுக்கு சந்தேகமில்லை என்று பட்டால்—அதோடு நேதாஜியின் அஸ்திக்கு—தேசியச் சொத்து என்ற முறையில் ஏதேனும் மரியாதை செலுத்தவேண்டுமென்று தாங்கள் கருதினால் உசிதம்போல் செய்ய எங்கள் அனுமதி தேவையில்லை. எங்கள் கடமை எங்களுக்குத் தெரியும் என்று நேருவுக்கு பதிலளித்துவிட்டாராம்.

மேலும் நேதாஜி சம்பந்தமாய்ப் பொறுப்பேற்க இந்திய மக்கள்தான் இருக்கிறார்கள். இந்திய மக்களின் பிரதிநிதித்வம் தமக்குத்தான் என்கிறார் நேரு. இந்நிலையில் மக்கள் சம்பந்தப்பட்ட நேதாஜி விஷயத்தில் முடிவுகட்டும் பொறுப்பை நேதாஜியின் குடும்பத்துக்கு விடுவது சரிதானா?

மற்றொரு கேள்வியும் முளைக்கிறது.

அதாவது :

நேதாஜியின் மனைவி என்று கதை கட்டப்பட்ட ஒரு மாதும், மகளும் வீயன்னா நகரில் இருக்கிறார்கள் அவர்கள்மீது நேதாஜியின் பெயரா வது சம்பந்தப்படுத்தப்படுவதால் தானோ என்னவோ, அவர்கள் தமது வாழ்க்கைச் செலவுக்காக இந்திய சர்க்காரிடமிருந்து எதையுமே எதிர்பார்க்கவில்லை. நேருசர்க்கார்விரட்டி விரட்டிக் கொண்டுபோய்க் கொடுக்கிறது, உதவியை.

முன்பு பண உதவியே வேண்டாம் என்ற அந்த மாதும் மகளும், பின்னர் நேருவை நேரில் பார்த்ததும் ஏற்றுக்கொண்டார்களாம், எல்லாம் செய்திதான். இதில் நிஜக்கலப்பு எவ்வளவு என்பது வேறு விஷயம்.

இந்த வகையில் நேருவைப் போற்றுவோம். ஏனெனில் விஷயம் கற்பனையாக இருந்தாலும், நேதாஜி இந்தியாவின் சொந்தம், அவர் இன்று இல்லை. அவர் மனைவிக்கும் மகளுக்கும் உதவிபுரிய வேண்டியது தம் கடமை என்று நேரு உணர்ந்து உதவி செய்தாரல்லவா! அதற்காகப் போற்றுகிறோம்.

ஆனால் நேதாஜியின் ஆதாரபூர்வமற்ற மனைவியும், மகளும் இந்தியாவின் சொந்தம் என்று கருதி அவர்களுக்குப் பொறுப்பேற்ற நேரு, நேதாஜி அஸ்தி விஷயத்தில் மட்டும் அதன் பொறுப்பை அவரது குடும்பத்தாருக்கு விட்டுவிட்டு விலகுவது ஏன்? பதினொரு பிள்ளைகளைப்பெற்று

(14-ம் பக்கம் பார்க்க)

வீட்டுக்கு வீடு தேவை!

ரமணீஸ் பேபி கிரைப்

❋ குழந்தைகளைப் பூரிப்போடு வளர்த்து வாழ்விக்க நினைக்கும் ஒவ்வொரு தாயும், கட்டாயம் வைத்துக்கொள்ள வேண்டியது

❋ ரமணீஸ் பேபி கிரைப்பின்மூலம் வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு, வளர்ச்சி, வளம், வனப்பு ஆகியவைபற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை

அற்பச் செலவில் அதிசய சாதனை! சைபால்

● இயற்கையால் ஏற்படும் கொப்புளங்கள்
● செயற்கையால் ஏற்படும் காயங்கள்
அத்தனையும்

சைபாலின் பிரயோகத்தால்விரைவில் குணம் காணும்

இரண்டும் கைபடாமல் நவீன இயந்திரங்களால் தயாரானவை.

— தயாரிப்பாளர் —

தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி, மதுரை

ஈ. வே. ராவை கோபித்த நேரு

கனம் காமராஜரைக் கண்டித்தாரா?

டில்லியிலிருந்து சூடேறிய நெஞ்சோடு விமானமேறிய நமது நேரு, சென்னைக்கு வந்ததும் குளிர்ந்து விட்டாராம்—அவர்தான் சொன்னார்.

சூடாற்றுகிற வகையிலாவது சென்னை, நேருவின் அபிமானத்தை பெற்றதற்கு மகிழ்ந்தோம்.

ஆனால், தமிழ் நாட்டில் 3 நாட்கள் வரை குளிர்ச்சியோடு சுற்றுப்பிரயாணம் செய்த நேரு, பிரயாணத்தின் முடிவில் வேலூர் கூட்டத்தில் பேசும் போது, (டில்லிக்குத் திரும்பும் கட்டம் வந்துவிட்ட கோளாறோ என்னவோ) கொதிக்கும் சூட்டோடு வார்த்தைகளை எல்லாம் தணலாக்கிக் கொட்டி விட்டார்—வீணில்.

நேருவின் குளிர்ந்த நெஞ்சைக் கொதிக்க வைத்தது கடந்துபோன, ஈ. வே, ராவின் கொடி எரிப்பு விளையாட்டு அறிக்கைதான்.

ஈ வே. ராவின் கொடிஎரிப்பு வைபவம், வெறும் அறிக்கையோடு அடங்கி அறுபது நாட்களுக்கு மேலாகி விட்டன.

அவர் கொடி எரிப்பு என்று அறிக்கை விடுத்தவுடனேயே மக்கள் குமுறிக் கொந்தளித்து விட்டனர், கொடி எரிப்பு அறிக்கை நிகழ்ச்சிக்கு வந்திருந்தால் அதன் விளைவு பல விபரீத அத்தியாயங்களை உண்டாக்கி இருக்கும். அந்த வகையில் மக்கள் நேருவுக்கோ மாகாணசர்க்காருக்கோ வேலை கொடுக்க விரும்பவில்லை.

மேலும் அந்த கொடி எரிப்பு அறிக்கையை, பெரியார் ராமசாமி தமது மாஜல் விளையாட்டுகளில் ஒன்ருகப் பயன்படுத்தினரே தவிர அதை உண்மைச் சம்பவமாக்கி காரியத்தைச் சாதித்துவிட அல்ல! அவரிடமிருந்து முளைத்த அறிக்கைககளில் ஒன்ருவது இதுவரை எதையேனும் விளைவுசெய்ததுண்டா? எல்லாம் அறிக்கையோடு சரி! ஆரம்பமும் முடிவும் அறிக்கையைக் கடந்துவிடாமல் கட்டுப்படுத்திக்கொள்வதுதான் அவர் இதுவரை கண்ட வெற்றிகள்! எனவே பெரியார் ராமசாமியின் கொடி எரிப்பு அறிக்கை, இரண்டு மாதங்களுக்குப் பிறகு நேருவின் ஆவேசத்தைக் கிளப்பி அறைகூவ வைக்கும் அளவுக்கு பெரிய பிரகடனம் அல்ல!

கொடி எரிப்பு அறிக்கை விடும் எல்லை வரை பெரியார் ராமசாமியை வளரவிடும் அளவுக்கு, ஆளுங் கட்சியான காங்கிரசில் தேசீய சக்தி தேய்ந்து கிடந்தாலும், கொடிஎரிப்பை நடப்புக்கு வரவிடாமல் தடுத்துப் புத்தி கற்பிக்கும் அளவுக்கு மக்களிடம் தேசீய சக்தி ஓங்கித்தான் இருக்கிறது! தேசீயக்கொடியை எந்த சக்தி அவமதிப்பதையும் தேசீய இந்தியன்—அவன் எந்த மொழியாளனுக இருந்தாலும்—ஒருபோதும் அனுமதிக்க மாட்டான். உயிரைக் கொடுத்தேனும் கொடியைக் காத்து விடுவான்.

இதை நேரு இவ்வளவு பெரிதுபடுத்தி ஆவேசத்தோடு பேசி, அவிந்துபோன அவ்விஷயத்தை உலகிற்கு அறிமுகம் செய்திருக்க வேண்டியதில்லை என்றே கருதுகிருேம்.

நேருவுக்கு ஆவேசம் வந்து, தணற் சொற்களை எறியவேண்டிய நிகழ்ச்சிகள் வேறு எத்தனையோ இருக்கின்றன. அவைகளிலெல்லாம் ஆவேசங் கொள்ளாத நேரு, ஆறிப்போன ஒரு சங்கதிக்குத் திரும்பவும் சூடு கொடுத்துக்கொண்டது அநாவசியம். இதனல் ஏற்பட்டுள்ள பலன் கொடி எரிப்புஅறிக்கையைத்தான் முக்யத்வமாக்கிவிட்டிருக்கிறது.

தேசீயக்கொடியை எரிப்பேன் என்று பச்சையாக அறிக்கைவிட்ட ஈ. வே. ரா, இந்திய தேசீயத்திற்கு எதிரி என்பது தீர்ந்த விஷயம்!

கொடியை அவமதிக்கும் கட்சிபோடு சமாதானமே சாத்தியமில்லை என்று நேருவே கூறுகிருர்.

ஆனல் அதே நேருவின் ஆட்சியில் ஒரு பகுதிக்கு முதலமைச்சராக இருக்கும் கனம் காமராஜ் தேசீய எதிரியாகிய ஈ. வே, ராவின் வீட்டிற்குச் சென்று க்ஷேமம் விசாரித்து வந்தார்.

தனது கட்சிக்கு நிழல் கொடுத்து வருகிற,உயிருக்குஉயிரான கொடியை அலட்சியப்படுத்திய ஒருவர்வீட்டிற்கு, அவர் எவ்வளவுதான் நண்பராக இருந்தாலும், ஒரு மாகாணப் பிரதமர் சென்று வருவது தேசீய வரம்பை மீறிய செயல்தானே? இதற்கு நேரு அவர்கள் கனம் காமராஜரிடம் ஏதேனும் கேட்டாரா? கேட்க வேண்டாமா? அல்லது அதுசரிதான் எனக்கருதி விட்டுவிட்டாரா? அது சரிதான்என்ருல்அரசாங்க பூர்வமாய் எந்தத் தவறையும் செய்யலாமென்று தானே அர்த்தப்படுத்த வேண்டும்?

பாட்னவில் சமீபத்தில் நடந்த மாணவர் கிளர்ச்சியில் கொடி அவமதிக்கப்பட்டது என்ற அடிப்படையில் துப்பாக்கிப் பிரயோகம்கூட நடந்து மாணவர் ஒருவர் உயிரைக் குடித்தது. அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து தோழர் ஜெயப்பிரகாஷ்நாராயண் ஒரு அறிக்கை விடுத்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

அறிவுத் திரள். [முதற்பாகம்]

● பத்திரிகைகளின் ஒருமித்த புகழ்ச்சியைக் கொண்ட உன்னத வெளியீடு!

● உலக அறிஞர்களின் வைரம் பாய்ந்தகருத்துக் குவியல்!

— ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது. —

தொகுத்தவர்: எஸ், குமரேசன். விலை ரூ. 1—12—0.

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு,

வேண்டுவோர் முன் பணத்துடன் எழுதுக.

நேஷனல் புக் ஸ்டோர்—114, நேதாஜி ரோடு—மதுரை.

நேருவுக்கு மாலையிட — மதுரத்துக்கு மறுப்பு?

டில்லி மக்கள் சபைக்கு திருச்சி மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட டாக்டர். எட்வர்டு பால்மதுரம், தமது தொகுதிக்கு நேரு வரும்போது மாலை போட்டு மரியாதை செலுத்த ஆசைப் பட்டார். ஆனால் அவர் அவ்வாறு மாலைபோட்டு மரியாதைசெய்ய மறுக் கப் பட்டுவிட்டாராம். ஆயினும்நேரு, டாக்டர். மதுரத்தின் தொகுதியில் பிரயாணம் செய்வார். அத்தொகுதி மக்களின் பிரதிநிதி இந்தியப் பிரத மருக்கு மாலைபோடக் கூடாதாம்.

இந்தியாவில் ஜனநாயகம் படுகிற பாட்டைப் பாருங்கள்.

இந்த நேரு, இந்திய மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாம்— நமக்கு நாணம் பிடுங்கித் தின்கிறது!

வெறும் பண்டித ஜவஹர்லால் நேருவாக இருந்தால் அவர் காங் கிரசுக்கு மட்டுமே தனிவுடைமையாக இருக்கலாம். ஆனால் இந்த நேரு இந்தியாவின் பிரதம மந்திரி. இவரை வரவேற்கவும், மாலையணிவித்து மரி யாதை செய்யவும் இந்திய மகன் ஒவ் வொருவனுக்கும் உரிமையுண்டு. ஜனநாயகம் என்றால் இதுதான் சரி யான நடைமுறை. ஆனால் திருச்சிக்கு வந்த நேருவுக்கு பல ஆயிரம் மக்க ளின் பிரதிநிதியான ஒருவர் மாலை யணிவிப்பதை மறுக்கும் கோரத்திற் கும் ஜனநாயகம் என்ற பெயர் இங்கு கொடுக்கப்படுகிறது.

டாக்டர் மதுரத்திற்கும் அவருக்கு வாக்களித்த மக்களுக்கும் சேர்த்துத் தான் நேரு பிரதம மந்திரியே தவிர காங்கிரஸ்காரர்களுக்கு மட்டுமல்ல!

காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் தான் என்றால், காங்கிரசுக்கு வாக் களிக்காத மக்களிடம் வரி வாங்காமல் நேரு அரசாங்கத்தை நடத்த வேண் டும்.

நேருவின் அரசாங்கத்திற்கு காங் கிரஸ்காரர்களை விட, காங்கிரசல் லாத மக்கள் தான் அதிகவரி செலுத் துகிறார்கள். மேலும் இந்தியாவில் உள்ள 35—கோடி மக்களில் 34கோடிப் பேர்களுக்கு மேல் காங் கிரசல்லாதவர்கள் தான். நியாயப்படி பார்க்கிறபோது, நேரு, காங்கிரஸ் காரர்களை விட காங்கிரஸ் அல்லாத வர்களுக்குத்தான் அதிகப் பிரதி நிதித்வம் வகிக்கிறார். ஆகவே நேரு, பிரதம மந்திரியாக இருக்கிறவரை, காங்கிரசல்லாதாருக்குத் தான் அதி கச் சொந்தம்.

இந்நிலையில், திருச்சி டாக்டர் மதுரத்தின் மாலை மரியாதையை நேருவுக்குச் செலுத்த மறுக்கப்பட் டது எந்தவகை நாகரீகத்தைச் சேர்ந் ததோ தெரியவில்லை.

டாக்டர் மதுரத்தின் வரவேற்பு மறுக்கப்பட்ட பிறகு அவரது தொகு திக்கு மட்டும் நேரு செல்வது என்ன முறை? அதுவும் தடுக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அதிலும் பாகிஸ் தான்தனம்தான் நடைபெற்றிருக் கிறது. ஆகவே இச்செயல் அத்தொகுதி மக்கள்சக்தியையும், அவர்கள்கொடுத் தத் தீர்ப்பையும் அவமதிப்பதாகும் என்பதோடு, நேருவை மக்கள் பிரதிநிதித்வத்திலிருந்து பிரித்து வைக்கும் செயலும் கூட இதுஎன்றே கருதுகிறோம்!

[7ம் பக்கம் தொடர்ச்சி]

அதில், ஒரு துண்டுத் துணிக் (தேசியக்கொடி)காகப் போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது கொடுமை என்று குறிப்பிட்டிருந் தார்.

அரசாங்கத்தின் முழுப்பலத்தை யும் செலவிடுவோம் — அரசாங்கமே அழிந்தாலும் அவசியமில்லை—என்று அடங்காத ஆவேசத்தோடு பெரியார் அறிக்கைக்கு இந்தியாவையே பண யம் வைத்து, இரண்டு மாதங்கழித்து எதிர்ப்பிரகடனம் விடுத்த நேரு. தேசத்தின் உயிர்ச்சின்னமான கொடியை ஒரு துண்டுத் துணிக்கு ஒப்பிட்ட தோழர் ஜெயப்பிரகாஷ் அறிக்கைக்கு, ஏன் ஆவேசத்தைக் காட்டவில்லை?

கொடியை எரிப்பேன் என்றார் ஈரோட்டுப் பெரியார்.

அவர் வீடு சென்று வாழ்த்தி வந் தார் கனம் காமராஜ்.

ஒரு துண்டுத் துணிதானே என் றார் ஜெயப்பிரகாஷ்.

இந்த மூன்றுக்கும் தன்மை வெவ்வேறாக இருந்தாலும் தவறு ஒன்றுதான்,

எனவே வேலூரில் பெரியார் அறிக் கைக்கு ஆவேசங்காட்டுமுன் கனம் காமராசரின் செயலுக்கல்லவா ஆவே சங் காட்டியிருக்க வேண்டும் நேரு?

துங்கபத்திரா அணையில் நேதாஜி சிலை.

இங்குள்ள ஐ. என். ஏ. கேம்பின் சார்பில் 15—8—55ல் மாஜி சீப் இஞ்சினீயர் என், கோவிந்தராஜய் யங்காரவர்களின் ஞாபகார்த்தப் பார்க்கில்செதுக்கிவைக்கப்பட்டிருந்த நேதாஜி அவர்களின் உருவச்சிலையை டி. பி. போர்டு செகரட்டரியும் சீப் இன்சினீயருமாகிய கனம் ஏ. ஆர் வேங்கடராமன் அவர்கள் திறந்து வைத்து அரிய சொற்பொழிவாற்றினார். அன்னாருக்கு ஐ. என். ஏ. கமிட்டியினரின் வரவேற்புப் பத்திரத்தை ஐ. என். ஏ. மேஜர் டாக்டர் ஸ்ரீ எஸ், கிருஷ்ணமூர்த்தி வாசித்தளித்தார். எக்ஸ்கூட்டிவ் இன்சினீயர் ஸ்ரீ கே. ஆர். ராஜகோபால் ஐயங்கார் அவர்கள் தேசீயக் கொடியை ஏற்றுவித்தும், ஹெட்கிளார்க் ஸ்ரீ சிவமூர்த்தியவர்களும் மற்றும் பல அன்பர்களும் நேதாஜியவர் களின் வாழ்க்கை, சேவை மற்றவைபற்றியும் விரிவான சொற்பொழி வாற்றப்பட்டதுடன் கேம்ப் கமாண்டர் ஸ்ரீ எம். கே. நாயர் அவர் கள் முடிவுரை கூறினர்கள்.



பீக்கிங்கில் நேதாஜி?

1952-ல் நமது அருமை நேதாஜி அவர்கள் மங்கோலிய டெலிகேஷனுக்குத் தலைமை வகித்து பீகிங் நகர் வந்திருந்ததாக கல்கத்தாவிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலத் தினசரியான

ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டு

பத்திரிகை தனது 5—10—55 பதிப்பில் ஒரு செய்தியை புகைப்படத்துடன் வெளியிட்டிருப்பதாக இரங்கூன் தகவல் ஒன்று கூறுகிறது.

அப்பத்திரிகைச் செய்தியின் முழு விபரங்களையும் அடுத்த கண்ணகியில் வெளியிடுகிறோம்.

ஆசிரியர்.

தென்னகத்துத் திரைவானத்தின் திரு விளக்கு!
நெஞ்சைப் பிழிந்து இமைகளை நனைய வைக்கும்
உணர்ச்சிக் கிட்டங்கி!

கே. ஆர். ராமசாமி
ஜெமினி கணேசன்
டி. எஸ். பாலையா
சகஸ்ரநாமம்
ராஜசுலோசனா
குசலகுமாரி
மாலதி ஆகியோர் நடித்தது.

விஜயா பிலிம்ஸ்
நீதிபதி
டைரக்ஷன்
ஏ. எஸ். ஏ. சாமி.

21—10—55 முதல்
வெற்றிகரமான 3-வது வாரம்
மதுரை சென்ட்ரலில்
தினசரி 3 காட்சிகள்.

மதுரை பிலிம்ஸ் வெளியீடு, மதுரை.

வேண்டாத வினை!

வினைகளை விலைக்கு வாங்கிக் கொண்டு திண்டாடுவதில் காங்கிரஸ் ஆட்சி, தனக்கென ஒரு தனி பாணியையே அமைத்துக்கொண்டிருக்கிறது—அநுதாபத்துக்குரிய விஷயம்.

இந்தியாவுக்கு இன்று உடனடித் தேவை ஐக்கியம். இந்த ஐக்கியம் அக்கக்காகக் கழன்று கிடப்பதைச் சரிசெய்யவேண்டிய வேலையை மேற்கொள்ளுவதை விட்டுவிட்டு, ஐக்கியச் சிதைவை அதிகப்படுத்தும் வேலையை ராஜ்யப் புனரமைப்பின் பெயரால் மேற்கொண்டதுஏனோவிளங்கவில்லை

ராஜ்யப் புனரமைப்புக் குழுவினர் ஒன்றரை வருடங்கழித்து விரித்திருக்கிற அறிக்கை, பல விபரீத விளைவுகளுக்கு அடியிட்டுவிட்டது.

இந்த அறிக்கைப்படி ராஜ்யஙகள் புனரமைப்புச் செய்யப்பட்டால், ஹிந்தி பேசும் மக்களை அதிகமாக்கிப் பிரிக்கப்பட்டுள்ள உத்தரப்பிரதேசத்துக்கு, அகில இந்தியாவும் அடிமைப்பட்டுத் தீரவேண்டும்.

மூவர் குழு அறிக்கையில் நாம் காணும் முக்கிய அம்சம் அது ஒன்றுதான்!

ராஜ்யங்களைப் பிரித்தமைக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, ஹிந்தி பேசுவோரிடம் அகில இந்திய உரிமையை ஒப்புவிக்கும் வேலையை மிகச் சாதுர்யமாய்ச் செய்திருக்கின்றனர் குழுவினர்.

இந்தியாவின் வீரவாரிசுகளான மராத்தியர்கள் மாகாண உரிமை பெறுவதைத் தடுப்பதற்காக புதிதாய் **விதர்ப்பம்** என்ற ஒரு ராஜ்யத்தையே உண்டாக்கி அவர்களின் சக்தியைப் பிரித்திருக்கிறார்கள்.

சீக்கியர்களைத் துள்ள விடாமல் அடக்கும் நோக்கமும் இதன் மூலம் மிகத்தந்திரமாய் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சென்னை ராஜ்யத்திற்குத் தமிழ் ராஜ்ஜியம் என்று பெயரிடவேண்டிய உயிர்ப்பிரச்சினை, மிக அலட்சியமாகக் கைகழுவப்பட்டுவிட்டது.

இவைகளின் பலன்—

கண்ட கண்ட இடங்களில் கலகங்களாக எதிரொலிக்கின்றன.

ஏன் இந்த வேண்டாத வினை?

மொழிவாரி மாகாணத்தை அநுமதிப்பது என்பது காங்கிரஸ் விதி. அதன்படி மொழிவாரியாகமாகாணங்களைப் பிரிப்பது எளிது—இத்தனை எதிர்ப்புகளும் ஏற்படா! மொழிவாரியாக மாகாணங்களைப் பிரித்தால், இப்போதிருப்பதைவிட அதிகமாகச் சில மாகாணங்கள் ஏற்படும். அதனால் தவறென்ன? நிர்வாகத்திற்கு இலகுவாகவும் இருக்கும். அதை விடுத்து காங்கிரசின் விதியையே கடந்து சென்று, புதிதாக ஒரு புனரமைப்புச் செய்து உள்நாட்டுக் குழப்படியை உண்டுபண்ணி அன்னியரின் கேடுகளுக்கு இடமளிப்பது அவிவேகமாகும்.

புனரமைப்புக்குழுவின் அறிக்கையில், ஒருமித்த அபிப்பிராயத்தைப் பெறமுடியாத பல அம்சங்கள் இருக்கின்றன. இதை நேருவே ஜாடையாக ஒப்புக்கொள்கிறார், இதன் மூலம் உடனடியாக எதிர்ப்புகள் கிளம்பிவிடாதிருக்கவே, நேரு இந்த அறிக்கையே முடிவானதல்ல—இது மக்கள் சபையின் விவாதத்திற்குப்பிறகுதான் முடிவாகும் என்று சமாதானம் கூறுகிறார் எனினும் எதிர்ப்புகள் நேருவின் ராஜதந்திரத்திற்கு அடங்கவில்லை—கிளம்பிவிட்டன.

மககள் சபையில் இந்த அறிக்கை விவாதிக்கப்படலாம். ஆனால்காங்கிரஸ் மெஜாரிட்டியாக இருப்பதால் இதே அறிக்கைதான் முடிவு என்பது நிச்சயம்.

எனவே இந்தப் புனரமைப்பு காங்கிரஸ் ஆட்சியின் மூலம் அமுலுக்கு வரலாமேதவிர அது நிரந்தரமான நிம்மதியை நாட்டில் ஏற்படுத்தாது—அது நல்ல எதிர்காலத்தின் சூசகமுமல்ல.

வெளிநாட்டார் மூலம் உண்டாகியுள்ள பல கடும் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையில் நிற்கிற இந்தியா, உள்நாட்டுத் தகராறுகளையும் உண்டாக்கிக்கொண்டு திண்டாடுவதைவிட, இந்த அறிக்கையைச் சுருட்டிக்கட்டி விட்டு மொழிவாரி மாகாணப் பிரிவினையை அனுமதிப்பதுதான் விவேகம்! அதுதான் சிதைந்துபோன ஐக்கியத்தைச் சீர்படுத்தும் !!

(2ம் பக்கம் தொடர்ச்சி)

ஆகவே அவர் அரசியல், ஆன்மீகம் என்ற இரட்டைத் துறைக்கும் இயைந்த **அவதாரச் செம்மல்!**

அவரைப்பற்றி நினைக்கும் நெஞ்சில் தூய்மையும், பேசும் வாயில் வாய்மையும், எழுதும் கையில் விறுவிறுப்பும் சுரக்கும்!

● ஆகவே அவரைப்பற்றி நினைக்கும்போதும், பேசும்போதும், எழுதும்போதும் **மனதை ஸ்படிகமாக்**கிக்கொள்ளவேண்டும். அதில் இன்றையக் கடையழிந்த அரசியல் நளினங்களையோ, இரவல் தன்மை மேவிய ராஜதந்திரத்தையோ, கீழ்த்தரமான பொறுமையையோ சம்பந்தப்படுத்தினால் தேசீயத்தின் சுத்த சக்தி மன்னிக்கவே மாட்டாது!

சாதாரண ஒரு போலீஸ்காரரோ ராணுவ வீரரோ மரணமடைந்துவிட்டால், அரசாங்க மரியாதை செய்ய வேண்டிய கடமை தெரிந்த நேருவுக்கு, இந்திய அரசாங்கத்திற்கு பிள்ளையார்சுழி போட்ட நேதாஜி விஷயத்தில் **அரசாங்க பூர்வத்தைக்** காட்டும் முக்கியகடமைதெரியவில்லை என்றால், அப்பாவிகளான நாம் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

● இத்தகைய நேரு சர்க்கார் இருக்கும்போது, நேதாஜி உயிரோடிருந்தால் என் வரக்கூடாது? என்று சிலர்—அவர்களும் நம்மைப்போல் அப்பாவிகள்தான்—கேட்கிறார்கள்.

—அவர்களுக்கு—நமது அருமை நேரு, நேதாஜியின் மரணச் செய்தி சம்பந்தமாய் நடந்து கொள்ளும் விதமே பதிலாக இருக்கட்டும்!

வந்தேமாதரம்!

சினிமா விமர்சனம்

நீதிபதி

மதுரை பிலிம்சார் வெளியிட்டுள்ள நீதிபதி, மதுரை சென்ட்ரல் சினிமாவிலும் மற்றும் தமிழ் நாடெங்கும் ஓடிக்கொண்டிருக்கிறது.

கடமையை ஒரு புறமும், சகோதரத்வம்—தாய்ப்பாசம் இரண்டையும் மறுபுறமும் கோதாவில் ஏற்றி மோதவிடப்பட்டிருப்பதில்பான்மைப்படி கடமை வாகை சூடுகிறது!

கதையின் மொத்த அம்சம் இதுதான், ஆனால் கற்பனை ஓட்டத்திற்கு வேகம் போதாத இக்கதையை, சம்பவ அடுக்குகளால் வேய்ந்து, கண்ணீர்த்தாரையைப் பெருக்கும் விதத்தில் தயாரித்திருக்கிறார்கள் — அதனால் தனி அம்சத்தோடு கம்பீரமாய் ஓடுகிறது.

ஒரு இடம்:

பல வருடங்களுக்கு முன் பிரிந்த தாயும், இரு புதல்வர்களும் ஒன்று சேர்ந்துவிட்டனர்—வெவ்வேறு தாங்களோடு.

அண்ணன் கொலைகாரன் ; தம்பி வழக்கறிஞன் ; கொலைகார அண்ணனுக்காக வழக்காடி விடுவிக்கும்படி தாய், இளைய மகனாகிய கொலைஞன் தம்பியை மன்றாடுகிறாள். தம்பி மனைவி கணவனிடம் சிபாரிசு செய்கிறாள். தம்பி தேம்புகிறான்—அண்ணனை விடுவிக்கச் சரி சொல்லவில்லை, ஏனெனில், அன்றைக்கு முதல்நாள் வரை வக்கீலாக இருந்த அவன், கொலைகாரன் அண்ணன் என்று தெரிந்து அவனுக்காக வழக்காடவேண்டிய அன்றுமுதல் நீதிபதியாகப் பதவியில் உயர்கிறான். அண்ணனுக்குத் தீர்ப்பளிக்கவேண்டிய பொறுப்பும் வந்து சேருகிறது.

தாய், மகனின் தாள் தொட்டு மன்றாட, மனைவி கலங்கியவாறு சிபார்சு செய்ய, நீதிபதியாகிவிட்ட மாஜி வக்கீல் ராஜா உதடுகளைச் சுருக்கி உள்ளுக்குள்ளேயே பொறுமுகிறான்.

இந்த இடம் நெஞ்சைப் பிசையும் கட்டம், இதில் ரசிகர்களின் கவனம் மொய்த்து நிற்கிறது. அம்மா, நான் இன்றுமுதல் நீதிபதி—அண்ணனுக்காக வழக்காட முடியாது—என்று தம்பி தேம்பிக்கொண்டே கூறுகிறான்.

இந்த இடத்தில், இளைய மகனின் பதவி உயர்வுக்காக மகிழவேண்டிய தாய், மூத்த மகனை விடுவிக்கவொட்டாமல் பதவி உயர்ந்துவிட்டதை நினைத்துச் சுருங்கிச் சோர்கிறாள். கணவனின் அண்ணன் கொலைக் குற்றவாளியாகி உயிருக்கு மன்றாடி நிற்பதை அறிந்து அதுவரை சிபாரிசு செய்து மகிழ்விழந்து வாடி நின்ற வக்கீல் மனைவி, கணவனின் பதவி உயர்வைக் கேட்டதும் அந்த அழுகை நிலையை மறந்து பூரித்துப்போகிறாள்.

இந்தக் கட்டத்தில் தாயின் பாங்கும், மருமகள் என்னதான் சிறந்தவளாக இருந்தாலும், அவள் கணவன் பக்கம்தான் இருப்பாள் என்ற இயல்பும் இமயமலையைக் கடந்து நிற்கிறது. கதாசிரியர் இந்தக் கட்டத்தில் தமது திறமையை முழு அளவுக்குக் கையாண்டிருக்கிறார்.

கே. ஆர். ராமசாமி நன்றாகத்தான் நடிக்கிறார்.—எனினும் வயது ஏறுகிறதல்லவா ! நடிப்பில் உள்ள பக்குவம் முகக்கட்டில் குறைவுபட்டுக் காண்கிறது.

ஜெமினி கணேசன் நடிப்பு மெச்சுதற்குரியது.

ராஜசுலோசனா இதில் சோபிக்க முயன்றிருக்கிறார். ஆனால் அவர் அழும்போதுகூட சிரிக்கும்போதுள்ள அழகு நெளிவதால், சோகக் கட்டத்திற்கு அவர் இன்னும் தேறவேண்டும்.

நீதிபதி படம் பாலையாவுக்காகவே எடுக்கப்பட்ட மாதிரி இருக்கிறது. ஏனெனில், இதுவரை பாலையா, தமது நடிப்புகளில் கோட்டைவிட்ட பகுதிகளை எல்லாம் இதில் நிரவல் செய்துவிடுகிறார்.

டி. எஸ். பாலையாவின் (மாம்பழ நாயுடு) ஹேட்டய்யா நடிப்பிற்காகவே இப்படத்தை எட்டுத்தரம்பார்க்கலாம்.

மாடுகளுக்கு

ஏற்படும் உள்—வெளி நோய்கள் அவ்வளவையும் எளிய செலவில் உத்திரவாதத்துடன் குணம் காணச் செய்கிறோம்.

மாடு வைத்திருப்போர் பல்லாயிரக்கணக்கில் எமது மருந்துகளில் திருப்திப்பட்டிருக்கின்றனர்.

விபரங்களுக்கு:

எம். என். பி. அன் சன்ஸ்,
105, வடக்குமாசி வீதி,
மதுரை.

அனார்கலி

தேம்பி அழும் அஞ்சலியும்— தேடி அலையும் சலீமும்!

மொகலாய சாம்ராஜ்யத்தின் ஏகச் சக்ராதிபதி அகபரின் மைந்தன் சலீம்உருவாக்கிய காதல் காவியத்தின் கதாநாயகிதான் அனார்கலி! கற்பனைக் காவியமாம்!

படம் தெலுங்கிலிருந்து தமிழுக்கு 'டப்' செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தெரிய முடியாத அளவுக்கு (தமிழ் என்று சில இடங்களில் புரியவும் முடியாத அளவுக்கு) நன்றாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே சில இடங்களில் உள்ளத்தை ரத்தம் கட்டி உறைய வைத்துவிடுகிறது.

எழெட்டு வருஷங்களுக்கு முன் அஞ்சலி அனார்கலியாக மாறி ஆடிப் பாடியிருந்தால் தியேட்டரே சலீம்மயமாக மாறிச் சொக்கியிருக்கும். சுருங்கச் சொன்னால் அஞ்சலியால் அனார்கலியாக மாறமுடியவில்லை, ஆனால் அனார்கலியாக நடிக்கமுடிகிறது!

நாகேஸ்வரராவ் நடிப்பு 'லைலா மஜ்னு'வை நினைவூட்டுகிறது. "அனார் அனார்'!' என்று அவர் அலறித்துடிக்கும் கட்டம் கான்கிரீட்டையும் கரைய வைத்துவிடும்! காதல் நடிப்பு அவருக்குச் சொல்லியா தரவேண்டும்? அவரது அங்கமெல்லாம் 'டூயட்' பாடுமே!

ரெங்காராவ் அக்பராக நடிக்கிறார். நிஜ அக்பர் இப்போது இருப்பாரானால் இவரிடம் வந்து அந்தக்கம்பீரத்தைக் கண்டு மெச்சித்தான் இருப்பார். மெச்சத் தகுந்த நடிப்பு!

நாகையா ராஜா மான்சிங்காக நடிக்கிறார். கெம்பீரமாக 'நடைபோட' நினைக்கிறார். ஆனால் கேலிச் சிரிப்பிற்குத்தான் ஆளாகிறார்.

கண்ணாம்பா அக்பரின் மனைவி ஜோதிபாயாக நடிக்கிறார், வசனம் சுடச்சுட இருந்திருந்தால் அவரது பேச்சுக்கு இன்னொரு 'மனோகரா பத்மாவதியாக மாறியிருப்பார்.

[அடுத்த பக்கம் பார்க்க]



மா. ச. கங்கையம்மாள்,
ஆயிரம் விளக்கு. சென்னை.

கே: இல்லறஜோதி என்ற படத்தில் "பாட்டும் பரதமும்" என்று குறள் வடிவத்தில் ஒரு பாட்டுப் பாடப்படுகிறதே அதை எழுதியது யார்? கண்ணதாசனு?

ப: அல்ல—யோகி சுத்தானந்த பாரதியார், தமது யோகசித்தியில் எழுதி இருப்பது, "பாட்டும்,பரதமும், பண்புள்ள நாடகமும் நாட்டிற்கு நல்ல பயன்" என்ற குறள் வடிவப் பாடல்.

கே. சி. வி, மேலூர்.

கே: பசும்பொன் தேவரவர்கள் ஆண்டவனைப்பற்றி தத்துவ ரீதியில் அற்புதமாகப் பேசுகிருர்கள், அதே ஆண்டவனைப்பற்றி பண்டார சன்னதிகளும் பேசுகிருர்கள், இருவரும் ஒருமேடையில் தோன்றிப் பேசியுமிருக்கிருர்கள். ஆனல், பண்டார சன்னதிகளும், தேவரவர்களும் ஒருவரோடொருவர்ஐக்கியமாகிவிட்டதாகத் தெரியவில்லை. இருவரும் வெவ்வேறு துறையினராதலால் ஐக்கியப்படவும் முடியாது. ஆனல், பண்டார சன்னதிகளும் பசும்பொன் தேவரவர்களும் ஆண்டவனைப்பற்றி பேசுவதில் உள்ள வித்தியாசம் என்ன?

மேலும் பகவனைப்பற்றிப் பிரச்சாரிக்கிற பண்டார சன்னிதிகள் மோட்டார், மாளிகை முதலிய சகல வசதிகளுடனும் வாழுகிருர்கள். ஆனல் பகவனைப்பற்றி பண்டார சன்னதிகளைவிடப் பயன்படப்பேசி மக்களைப் பகவன் வசப்படுத்தும் சக்தி வாய்ந்த தேவரவர்கள், அவ்வளவு சுகமாய் வாழ்வதாகத் தெரியவில்லை, ஏன் இந்த வேறுபாடு?

ப: ஐயா, நீர் உள்ளேயிருந்து குடையும் ஒரு புள்ளி என்று நினைக்கத்தோன்றுகிறது. பண்டார சன்னதிகள் பார்க்கும் பகவத் வேலையில் பெரும்பகுதியைத் தேவரவர்கள் பார்த்து வருவதால், அவர் அரசியல் வேலையை அதிகம் கவனிக்கவில்லை என்ற உங்கள் அபிமானக் குறைபாட்டைக் கேள்வியாக்கி இருப்பதாகவும் படுகிறது. எனினும் கேள்வி சரியானதாகஇருப்பதால் பதிலளிக்கிறேம்.

பகவனைப் பேசுகிற வகையில் பசும்பொன் தேவரவர்கள், [ஓர் இந்திய அரசியல்வாதிக்குரிய] கடமையைச் செய்கிருர்கள்.—பண்டார சன்னிதிகள் தமது தொழிலைச் செய்கிருர்கள். கடமையைச் செய்கிறவர்கள் எல்லா வசதிகளையும் பெற்று சுகமனுபவிக்க முடியுமா? அப்படி அனுபவித்தநபரை நமக்கு புராணங்களும் சரித்திரங்களும்கூட அறிமுகப்படுத்தவில்லையே பண்டார சன்னதிகளுக்கும் பசும்பொன் தேவரவர்களுக்கும் பகவத் சேசைவையைப் பொறுத்தவரை உள்ள வித்தியாசம் இதுதான்.

ப, க்ராந்தி, ராஜபாளையம்.

கே: உ.மு. தேவரவர்கள் பர்மா சென்றுவிட்டார்களா?

ப: இன்னுமில்லை; பர்மா அரசாங்க அனுமதிக்காகக் காத்திருக்கிருர்கள்.

ஏ. யானைமலை, கள்ளந்திரி

கே: சுதந்திரமென்ருல்என்ன? அதை இன்று அனுபவிப்பது யார்?

ப: சுதந்திரமென்ருல் மக்களை மரியாதையோடு வளங்கொழிக்க வாழவைக்கும் ஒரு மகத்தான சக்தி என்பது பொருள். ஆனல் அது இன்று இந்தியாவைப் பொறுத்தவரை புதுக்காங்கிரஸ்காரர்களின் தனி உடமையாகிவிட்டது. சுதந்திரத்தை இன்று அனுபவிப்பது மக்களின் விரோதிகள்.

என். கே. ராஜகோபாலன்,
மதுரை.

கே: வயதுவந்தோருக்கு வாக்குரிமை கொடுத்ததால்த்தான் இன்று காங்கிரஸ் ஜெயிக்கிறது என்று கருதுகிறேன்-சரிதானு?

ப: படிக்காதமக்கள் பெரும்பான்மையாக இருப்பதால், அவர்கள் புதுக்காங்கிரசை பழைய பரிசுத்த காங்கிரசாக இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதும் ஒரு காரணம்,

வே. சங்கரன், காஞ்சி.

கே: நேதாஜி அரசாங்க நாளைக் கொண்டாடவேண்டும். அந்தத் தேதி என்ன?

ப: அக்டோபர் 21—26-ம் நாள் வரை கொண்டாடலாம்—கொண்டாடவேண்டும்—கொண்டாடுங்கள்.

[8-சி. பக்கம் தொடர்ச்சி]

மாமன் மகள்

வசனத்தை ஸ்ரீதர் எழுதியிருக்கிருர். புதுமையைவிட பழமைதான் மேலோங்கி நிற்கிறது. அடுக்குமொழி எழுத முயன்று கஷ்டப்பட்டிருக்கிருர்.

சந்திரபாபுதான் படத்தின் கதாநாயகனை விளங்குகிருர். குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்து உடலிலுள்ள சிரிப்பையெல்லாம் தீர்ந்துபோக வைத்துவிடுகிருர். மாமனர் காலில் விழுந்து அவர் கும்பிடும் காக்ஷியை இன்று நினைத்தாலும் சிரிப்பு வராமலிருக்காதே!

சாவித்திரியை அழகு 'கோடவுண்' ஆக நடமாட—நடிக்க வைத்திருக்கிருர்கள். 'வேல்விழிக்கு' அவர் அர்த்தம் பயிலும் கட்டத்தில் 'மேக்கப்' பிரமாதம்.

டி. எஸ். துரைராஜ் வேலைக்காரனுக வந்து வெளுத்து மடிக்கிருர்.

பாலையா பாராட்டும்படி நடித்திருக்கிருர். தகுந்த நேரங்களில் தக்கவித உணர்ச்சிகளை முகத்தில் ஓடவிட்டு பாராட்டுதலைப் பெற்றுவிடுகிருர்.

ஜெமினி கணேசன்தான் கதாநாயகன். ஆனல் அவர் முகத்தில் எந்தவித உணர்ச்சிப் பிரதிபலிப்புமே இல்லை. நடிக்க ஏராளமான சந்தர்ப்பங்கள் இருந்தும் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

ஒலியைவிட ஒளிப்பதிவு நன்ருக இருக்கிறது.

இப்படம் மதுரை வீயார் பிலிம்ஸ் வெளியீடு.

தொடர்கதை

துளசி

“ஆத்ரேயன்”

[சென்ற அலை தொடர்ச்சி]

4

வாசலில் டாக்ஸி வந்து நின்றது. சிங்காரம் ஆவலாகப் பார்த்தான், ‘போன மச்சான்கள்’ திரும்பி வந்துகொண்டிருந்தனர். வேண்டிய மனிதர் வண்டியிலிருந்து இறங்கவில்லை. ஒரு புது மனிதன் இறங்கினான். “அவன் யார்? பின்கட்டுக் கட்டிக் கூட்டி வருகிறார்கள்!” என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டே சோபாவில் போய்ச் சாய்ந்தான்.

மழை இன்னும் விடவில்லை. லேசாகப் பெய்துகொண்டிருந்தது.

சொட்டச் சொட்ட நனைந்த உடையுடன் நான்குபேர் உள்ளே வந்தனர். பின்கட்டுக் கட்டப்பட்டிருந்த புது மனிதன் — வாலிபனும் — உள்ளே நுழைந்தான் கம்பீரமாக.

“இவன் யார்? எதற்கு இவனைப் பின்கட்டுக் கட்டிக்கொண்டுவந்திருக்கிறீர்கள்” “சாமி இவர்தான் காகிதக்கட்டுடன் ரயிலைவிட்டிறங்கி நீங்க சொன்ன மோட்டாரில் ஏறினார். அந்த மோட்டாரைப் பின்பற்றி வழியில் மறித்து காகிதக் கட்டோடு கொண்டு வந்தோம். இதோ! அந்தக் கட்டு” என்று நனையாமல் பத்திரமாக வைத்திருந்த ஒரு பொட்டலத்தைச் சிங்காரம் முன் வைத்தான் நால்வரில் முதல்வன்.

சிங்காரம் அவசரமாகப் பொட்டலத்தைப் பிரித்தான்.

ஜைசான பட்டுப் புடவை ஜரிகை வேலைப்பாடுகள் மின்சார ஒளியில் வெட்டித் தெறித்தன. சில நிமிடம் அதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

பிறகு தலை நிமிர்ந்து “அவர் கட்டுகளை அவிழ்த்துவிடுங்கள் மடையர்களா!” புடவையிலிருந்து ஆளை நிதானித்தார் போலும்.

கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன. சிங்கம் எழுந்து பிடரியைச்சிலிர்த்துக்கொள்வதுபோல் வாலிபன் கம்பீரமாக கைகளை உதறிக்கொண்டு சிங்காரம் பக்கத்தில் கிடந்த ஒரு சோபாவில் அமர்ந்துகொண்டு “என்னை என்ன செய்வதாக உத்தேசம்? என் முக்கியமான காரியம் கெட்டுப்போய்விட்டதே! இதற்கு ஜவாப்தாரி யார்?”

சிங்காரம் ஒரு கணம் திகைத்தான்.

“பெரிய தவறு நடந்துவிட்டது. எங்கள் காரியஸ்தன் ஒருவன் முக்கியமான தஸ்தாவேஜுகளை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான், அவனைப் பின்பற்றி அழைத்துவர இந்த தூங்கு மூஞ்சிகளை அனுப்பினேன். இவர்கள் எங்கோ படுத்துத் தூங்கிவிட்டு உங்களை அழைத்து வந்திருக்கிறார்கள், மன்னிக்கவும். உங்களை எங்கு கொண்டு விடவேண்டும் தாங்கள் யாரோ?“ என்று நயமாகச் சொன்னான்,

வந்தவன் டிரௌசர் பாக்கட்டில் சிறிது வெளியே தெரியும்படி இருந்த ‘பிஸ்டல்’தான் சிங்காரத்தின் பணிவுரைக்குக் காரணம். மேலும் கட்டவிழ்த்தவுடன் வாலிபன் வலக்கரம் அதன் பக்கத்திலேயே விளையாடிக்கொண்டிருந்தது. அவன் கண்கள் அந்த ஹாலை ஆராய்ச்சிசெய்துகொண்டிருந்தன,

சரி நான் வருகிறேன். டாக்ஸிக்காரனிடம் நான் பேசிக்கொள்கிறேன். நான் யார் என்று இப்பொழுது சொன்னால் உங்களுக்குத் தெரியாது. மதுரைக்குப் புதியவன். தவறுவது இயல்பு. அது மறுபடியும் நடவாமல் திருத்திக்கொள்வதுதான் சிறந்தது. வருகிறேன்” என்று பதிலுக்கும் எதிர்பார்த்து நிற்காமல் அந்தப் பங்களாவுக்குப் பழக்கமானவன் போலவே படி இறங்கினான்.

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதாக எண்ணிக்கொண்டு சிங்காரம் நீண்ட பெருமூச்சு விட்டான். பின் எழுந்து வெளிவந்து வீதியைப் பார்த்தான். டாக்ஸி வந்த வழியே போய்க்கொண்டிருந்தது. காரின் பின் சிவப்பு விளக்கு கண்ணுக்கு மறையும்வரை நின்று கவனித்தான்.

“இவன் யாராக இருக்கும்” என்று கேட்டுக்கொண்டே சோபாவில் வந்து சாய்ந்தான்.

அவன் சகாக்கள் எஜமான் என்ன சொல்லப்போகிறாரோ என்று சிங்காரத்தின் சிவந்த முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றனர்.

அவன் உள்ளத்திலோ ஒரு மகா யுத்தம் நடந்துகொண்டிருந்தது. சூழ்ச்சிகளும் பிரதி சூழ்ச்சிகளும் உருவாகிக்கொண்டிருந்தன.

* * *

ஜன்னல் கண்ணாடிக் கதவில் மழைத்துளிகள்போடும் கோலத்தைப் பார்த்துக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்திருந்தாள் துளசி.

அறையின் வாசல்படிப் பக்கம் அவள் தாய் தூக்கம் வராமல் படுத்திருந்தாள், துளசி தூங்காமல் படுக்கையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், “துளசி, ஏன் உட்கார்ந்திருக்கிறாய் தூக்கம் வல்லையா? நல்ல பெண் நீ. அப்பா ராத்திரி வராவிட்டால் காலையில் வருவார். அவர் என்ன பச்சக் குழந்தையா? படுத்துத்தூங்கு. அப்பாவை மழைத் தண்ணி அடிச்சுண்டு போயுடாது!” என்றாள்.

“இல்லை அம்மா! எனக்கு என்னமோ பயமாக இருக்கிறது. சிங்காரத்தின் சூழ்ச்சிகள் உனக்குச் சொன்னால் தெரியாது. ராஜா ஊருக்குப் போனதிலேயிருந்து அவன் ஒரு மாதிரி இருக்கிறான் என்று பாரியாக என் காதில் விழுந்தது. அப்பாவும் இன்று ஏதோ முக்கியமான ஒரு தஸ்தாவேஜியோடு நகரத்திற்குப் போயிருக்கிறார். அதுதான் எனக்குக் கவலை”

எழுதலாம் — எழுதலாம் — எழுதிக்கொண்டே இருக்கலாம்!

அவ்வளவு அருமையானது

நேவி பவுண்டன்

நேவி பென் மேக்கர், 46, கீழ வெளிவீதி, — மதுரை.

"அசடு, சிங்காரத்தின் சூழ்ச்சி உன் அப்பாவை என்ன செய்யும்? எல்லாம் மாமா கவனித்துக்கொள்வார். அம்பிகையை நினைத்துக் கொண்டு தூங்கு."

தாயாருடன் தர்க்கம் செய்யத் துணியவில்லை, கல்யாணி சுத்த ஆத்மா. வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணுபவள். தன்னைப் போல்தான் எல்லாரும் இருப்பார்கள் என்ற மனப்பான்மையும் அதிகம்.

தாயார் சொல்படி விளக்கை அணைத்துவிட்டு படுக்கையில் படுத்தாள் துளசி.

மழை நன்றாக விட்டுவிட்டது. சிறிது தூறலும் இல்லை. ஆனால் தூரத்திலே மலைக்குப் பின்னால் மின்னல் விளையாடிக்கொண்டிருந்தது-

திடீரென்று அவளுக்கு ராஜாவின் நினைவு வந்தது. அவன் கங்காதரருக்கு எழுதிய கடிதமும் அவள் முன் வந்து நின்றது.

அதில் அவன் வர்ணித்திருந்த நீல அலை வீசும் கடலையும் அதைக் கிழித்துக்கொண்டுபோகும் கப்பலும், சிங்கப்பூரில் அவன் கண்ட காட்சிகளும் அமெரிக்காவில் தங்கி இருக்கிற ஹோட்டலின் வசீகர வனப்பும் 'ஏன் தானும் என் ராஜாவுடன் படிக்கப்போகாமல் இருந்தோம்' என்ற எண்ணத்தைத் தூண்டின. 'ராஜா அழைத்துப் போவதாகத்தானே சொன்னான். மாமாவும் இசைந்தார். அம்மாவுக்குக் கொஞ்சம்கூட இஷ்டம் இல்லை. பருவத்தைக் காரணம் காட்டி தடை செய்தாள். நல்ல அம்மா!'

தலைக்குமேலே சுழன்ற மின்சார விசிறியின்மீது பார்வையைப் பதித்து சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள்-

சிந்தனையா அது! நடந்த நிகழ்ச்சிகள் மறுபடியும் அவள் முன்பு திரையிட்டன.

ஒரு வருஷத்திற்கு முன்பு கொடைக்கானலுக்கு ராஜாவுடன் போயிருந்தபோது இருவரும் ஒரு படகில் வெகு நேரம் ஏரியில் சுற்றிச் சுற்றி வந்தார்கள். கடைசியில் துளசிக்குப் பயம் வந்துவிட்டது. படகு கவிழ்ந்துவிட்டால்!

"ராஜா எனக்குப் பயமாக இருக்கிறது. படகு ஆடுகிறது. என்னைக் கரையில் சேர்த்துவிடு..."

"பயமா, அசடுதான் நீ. நான் பக்கத்தில் இக்கிறேனே. எனக்கு நல்லா நீஞ்சத் தெரியும் என்பது உனக்குத் தெரியாதா. படகு கவிழ்ந்தால் உன்னைக் கரைசேர்த்துவிடுகிறேன்."

"ரொம்ப ஆழம் இருக்காது?"

"ஆழம் இருந்தால் என்ன. சின்ன பரீட்சை பார்ப்போமா...?" படகை லேசாக சாய்த்தான்.

"வேண்டாம், வேண்டாம்......... விஷப் பரீட்சை! என்னைக் கரை சேர்த்துவிடு.........

"இது ஆறு இல்லை. ஏரி......... சுழல் கிடையாது, ஆனால் முதலைகள் இருக்கும்."

"அம்மம்மா! முதலையா...சீக்கிரம் சீக்கிரம் கரைக்குக் கொண்டுபோ ராஜா . . ." என்று அவன் பக்கத்தில் ஒண்டிக்கொண்டாள்.

காதல் அப்பொழுதுதானே அவளிடம் அரும்புகட்டி நாணத்துடன் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தது.

ராஜா துளசியைத் தட்டிக் கொடுத்து "பயப்படாதே துளசி . . . இதோ கரைக்குத் திருப்புகிறேன்."

அந்த சம்பவத்தை நினைத்து அதிலே லயித்துவிட்ட துளசி தன்னை அறியாமலே உறங்கிவிட்டாள்.

* *

அமைதியின்றி கடியாரத்தைப் பார்த்தார் கங்காதரர்.

"மணி பதினொன்றாகிவிட்டதே! அவர் வாய் முணுமுணுத்தது. ஈஸிசேரிலிருந்து மெள்ள எழுந்து நெய் விளக்கை மறுபடியும் ஏற்றிவைத்து வணங்கினார். விளக்கு சுடர் விட்டு எரிந்தது. ஆடாமல் அசையாமல் முன்போல! அதில் அவருக்கு கொஞ்சம் மன அமைதி கிடைத்தது போல் காணப்பட்டார். என்றாலும் நித்திரை செய்யப் போகவில்லை.

பால்கனியில்போய்நின்றுகொண்டு வெளியே பார்க்கலானார்.

மழை மேகத்தில் பதுங்கியிருந்த நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாக வந்து உலகத்தைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கின.

மணி பன்னிரெண்டு அடித்தது. அவர் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருந்தார். சோமநாதர் வரவையே எதிர் பார்த்திருந்தார். தூரத்தில் தெரியும் ரஸ்தாவில் வண்டி வருகிறதா என்று கண்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டிருந்தன. நெய் விளக்கு அணைந்தது அவருக்கு வேண்டாத கவலைகளையும் சந்தேகங்களையும் நினைக்கச் செய்தது.

'சோமநாதர் சேமமாக வந்துசேர வேண்டுமே' என்ற கவலைதான் தற்பொழுது.

வாழ்க்கையில் துன்பம் சிலசமயம் சொல்லிக்கொண்டே வருகிறது; அறிகுறிகள் முன்னறிவிப்பு ரேகை போல் காண்பிக்கத்தான்செய்கிறது;

[16-ம் பக்கம் பார்க்க]

குழந்தைகளின் தேவை?

வீட்டுத் தேவைகளில் கட்டாய ஸ்தானத்தை வகிப்பது?

'ஆரென்ஸ்'
கிரைப்-டில்-வாட்டர்

சோனல்

இரண்டும்

மதுரை பாரத் டிரக் ஹௌசின் உன்னத உற்பத்திகள்.

கனம் காமராஜுக்குப் பதில் டி. டி. கே.

நமது பாரதரத்னம் நேரு சென்னைக்கு வந்தாரல்லவா—அக்டோபர் 2—ல், அப்பொழுது அவர் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கியவுடன் சென்னை மந்திரிகள், அதிகாரிகள், பிரமுகர்கள் ஆகியோரை நேருவுக்கு அறிமுகப்படுத்தி வைக்கவேண்டும்—மாமூல்.

இந்த மாமூல் இருக்கிறதே இது எதற்காக உயிர்வைத்துக் கொண்டிருக்கிறதோ தெரியவில்லை.

நன்கு தெரிந்தவர்கள், சகமந்திரிகள், தனக்குப் பிறந்த மகளாக இருந்தால் அவளையும் கூட இன்னின்னார் என்று அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும். இது வெள்ளையாட்சியில் ஏற்பட்ட விதி. அது சொந்த ஆட்சியிலும் தொடருகிறது. இது இருக்கட்டும்.

அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சென்னை மந்திரிகளையும், அதிகாரிகளையும் நேருவுக்கு அறிமுகப்படுத்தும் வேலையைச் செய்தது யார் தெரியுமா?

மத்திய சர்க்கார் மந்திரி கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரி!

இவர் ஏற்கனவே வேறு வேலையாக சென்னைக்கு வந்திருந்தவர்,

நேருவை வரவேற்க விமானத் திடலுக்கு, சென்னை மந்திரிகளுடன் இவரும் வந்திருந்தார்.

அப்பொழுது சென்னை மந்திரிகள்—அதிகாரிகள்—பிரமுகர்கள் ஆகியோரை விருந்தினராகிய நேருவுக்கு அறிமுகப்படுத்தவேண்டிய வேலையை செய்திருக்கவேண்டியது, மாகாணப் பிரதமரான காமராஜ்தான். இது மாமூல் மட்டுமல்ல, மாகாண மரியாதையும் இதில் அடங்கி இருக்கிறது—கனம் காமராஜ் இல்லாது போனால் அடுத்த மந்திரி கனம் சுப்பிரமணியமாவது அவ்வேலையைச் செய்திருக்க வேண்டும்.

ஆனால் கனம் காவன்னா அவர்கள் வேலையை விருந்துக்கு வந்திருந்த கனம் டீனா செய்து முடித்தார்—சென்னையின் பெரிய கனம் காவன்னாவின் முன்னிலையிலேயே! அதுமட்டுமல்ல, சின்னக் கனம் சுப்பிரமணியம், கனமில்லாத ஆனால் இரட்டைத் தகுதிகு கக்கன், இதர மந்திரிகள் உள்பட எல்லோரையும் சேர்த்தே கனம் டீனா, நேருவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதன்போது நமது மகாகனம் வாய்ந்த மந்திரிகளின் முகங்களில் இளமகிழ்ச்சி கும்மியிட்டதேயன்றி தமது வேலையை இன்னொருவர் பார்க்கிறாரே என்ற வெட்கம் மேடுகட்டவில்லை!

இந்த நிகழ்ச்சியை வைத்து மக்கள் வட்டாரத்தில் சிலர்—!—

காமராசருக்குப் பதிலாக டி. டி. கே. சென்னை முதன் மந்திரியாவார் என்று ஏற்கனவே அடிபடும் வதந்திக்கு இதுவும் ஒரு ஆதாரமாக இருக்குமென்றும்,

வேறு பலர்—!—

ஐயோ தலைவிதியே! தமிழ் நாட்டிற்கு வந்த ஒரு விருந்தினருக்கு தமிழ் நாட்டு மந்திரிகளையும், அதிகாரிகளையும் அறிமுகப்படுத்திவைக்கக் கூட மத்திய சர்க்கார் மந்திரியை வாடகைக்குப் பிடிக்கவேண்டிய கேவலநிலையில் நிற்கிறதே தமிழ்நாடு என்று தலையில் அடித்துக்கொள்கிறார்கள்!

வேறு என்ன செய்வார்கள் மானமுள்ள மக்கள்?

வயிற்றில் அடித்துக்கொள்ளலாம் என்றால், அடித்துக்கொள்ளும் அளவுக்கு வயிறு உப்பலாக இல்லை—அது உள்ளே குடை சாய்ந்து கிடக்கிறது

நெஞ்சில் அடித்துக்கொள்ளலாம் என்றால், இப்போது நெஞ்சு இருக்கிற லட்சணத்தில் ஒரு தட்டுத் தட்டினால் நெஞ்சின் விரிச்செலும்புகள் அக்கு அக்காகக் கழன்றுவிடும்,

ஆகவே தலை ஒன்றுதான் கொஞ்சம் உரமாக இருக்கிறது: ஆனதால் தலையில் அடித்துக்கொள்கிறார்கள்.

வோட்டுகளை நிதானித்துச் செலுத்தாவிட்டால் தலையில் அடித்துக்கொள்ளும் விதியிலிருந்து எப்படித் தப்புவது?

களங்கமற்ற பளிங்குத் தன்மை
வாய்ந்தவை
எங்கள்பதார்த்தங்களும்
பானங்களும்!
ஸ்ரீ ஷண்முகா கபே
290, ராம்நாட் ரோட்—மதுரை.
ஐஞ்சுவை சுரந்த
தீபாவளி ஸ்வீட்களை
எதிர்பாருங்கள்!
வணக்கம்!

நவீன எகிப்து பாவாடைத் தன்மையில் இல்லை!

மேற்கத்தியருக்கு எகிப்தின் எச்சரிக்கை!

பரூக் மன்னருக்குப் பிந்திய எகிப்து என்றால், ஆங்கிலோ அமெரிக்கருக்கு ஒருபுறம் பீதி—மறுபுறம் எரிச்சல்!

ஏனெனில் புதிய எகிப்து, ஆங்குலோ—அமெரிக்கரின் பாரம்புரை உரிமையில் கைவைத்து கதிகலங்க வைத்த நாடல்லவா? அதனால் இந்தப் புதிய எகிப்து என்று அழியும் என்பதில் அவர்களுக்கு ஒரே நாட்டம்.

பரூக் மன்னரின் எல்லைமீறிய கொடுமைகளின் புதைகுழியிலிருந்து முளைத்த புதிய எகிப்து எப்படி அழியும்? அழிக்கத்தான் முடியுமா?

இந்தக் கேள்வியையும், ஆங்கிலோ—அமெரிக்கர் கேட்டுக்கொள்ளாமலில்லை. எனினும் பாகிஸ்தான் மூலம் இந்தியாவைப் பதம் பார்ப்பதுபோல மத்திய கிழக்கில் இஸ்ரேலின் மூலம் எகிப்தை அடக்கிவிடலாம் என்று பாதை பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இதைப் புரிந்துகொண்ட எகிப்து சமயம் பார்த்து விழித்துக்கொண்டது. அதன் பலன்தான் செக்கோஸ்லோவேகியாவிடமிருந்து ஆயுதக் கொள்முதல் செய்திருப்பது.

இது அமெரிக்க—பிரிட்டனை அலமறவைத்திருப்பதோடு அவர்களின் திட்டத்தில் விழுந்த தீயாகவும் ஆகிவிட்டது! துடிக்கிறார்கள்—துயரப்படுகிறார்கள்.—ஏறுக்கு மாறாக எகிப்தை வசைகிறார்கள்—அதே சமயம் பயமுறுத்தியும் பார்க்கிறார்கள்.

இதற்கெல்லாம் சேர்த்து வாஷிங்டனிலுள்ள எகிப்திய ஸ்தானிகர் ஒரு எதிர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

அதில் எகிப்தின் தரப்பிலுள்ள நியாயமும். மேற்கத்தியர் தரப்பிலுள்ள அக்ரமமும் அப்படியே உறைந்திருப்பதைப் பாருங்கள்!

எகிப்திய ஸ்தானிகர் அறிக்கை அப்படியே வருமாறு:—

● எங்கள் எகிப்தின் தேவைக்கு ஆயுதக் கொள்முதல் செய்ய, செக்நாட்டோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம்.

இது மத்திய கிழக்கில் உள்ள ஆயுத அளவுக் கட்டுப்பாட்டிற்கு ஒரு பெரிய பயமுறுத்தல் என்பது மேற்கு நாடுகளின் வாதம்.

இந்த வாதத்துக்குள்ளேயே பிரதிவாதம் மிகைப்பட்டிருப்பதை உலகம் உணர்ந்திருக்கும். ஆயினும் எனக்குள்ள கடமையை அனுசரித்து இதை வெள்ளையாக விவரிக்கிறேன்,

மத்திய கிழக்கில் இதுவரை ஒரே தரப்பிடம் இருந்தது ஆயுதக் கொள்முதல் எல்லாம்! அதாவது: மத்திய கிழக்குக்கு ஆயுத விநியோகம் செய்யும் குத்தகை இதுவரை மேற்கு நாடுகளிடமே இருந்து வந்திருக்கிறது,

இதன்பலன் எப்படி விடிந்திருக்கிறது தெரியுமா? கூறுகிறேன்:

இஸ்ரேல் நாட்டின் ஜனத்தொகை 15 லட்சம். அரபு நாடுகளின் ஜனத்தொகை 450 லட்சம். இவ்விரு இனத்தவரும் வாழ்வது மத்தியகிழக்கில்.

ஆனால் 450 லட்சம் அரேபியர்களுக்குள்ள ராணுவ—ஆயுத வலிமையை விட, 15 லட்சம் இஸ்ரேலியர்களிடம் எத்தனையோ மடங்கு அதிகமாகயிருக்கிறது. இதனால் இஸ்ரேல் தலைவர்கள் 450 லட்சம் அரேபியர்களையும் எப்படியோ மதிக்கிறார்கள்—அறைகூவவும் செய்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களிடம் ஆயுத எதுக்களிப்பு இருக்கிறது.

இஸ்ரேலுக்குமேலாக இல்லாது போனாலும், அதனுடன் சமவலிமைபெற்றாவது இருக்கவேண்டுமென்பதற்காக நாங்கள் மேற்கத்தியரிடம் ஒவ்வொரு வருடமும் ஆயுத உதவி கேட்டுக்கொண்டே வருகிறோம். ஆனால், இதுவரை எந்த ஆயுதமும் எங்களுக்கு வந்தபாடில்லை. ஆயினும் காத்திருந்து மேற்கத்தியரின் போக்கைக் கவனித்து வந்தோம்,

நேருஜீயின் பிரஜைகள்?

கோவாவை இந்தியாவின் உடைமையாக்க முதன் முதல் புறப்பட்ட சத்தியாக்ரஹக் கோஷ்டிக்குத் தலைமைதாங்கிச் சென்ற பி. சோ. கட்சித் தலைவர் திரு. கோரேக்கும், லிமாயிக்கும் போர்ச்சுகல் ஆட்சி 10 வருடம் சிறைத் தண்டனையும் நாள் 1க்கு 169 ரூ. வீதம் 2 வருடங்களுக்கு அபராதமும் விதித்திருப்பதோடு' பத்து வருடங்களுக்குப் பிறகு அவர்கள் நாடுகடத்தப்படுவராம்—தீர்ப்பு!

மக்கள் சீனாவுக்கு எதிர் புரிந்தனர், அமெரிக்க விமானிகள் சிலர்; அவர்களை சீன சர்க்கார் கண்ணியமாகச் சிறைப் பிடித்து வைத்திருந்தது; அவர்களை விடுவிக்க நமது நேரு, சீனாவுக்குக் கிருஷ்ண மேனனைத் தூதனுப்பினார்.

அந்த நேருவின் பிரஜைகள் திரு. கோரேக்கும், லிமாயியும். இவர்களுக்கு லிஸ்பன் ஆட்சி 10—வருட சிறைத் தண்டனை விதித்திருக்கிறது.

✲ என்ன செய்யப்போகிறார் நேரு?

எங்கள் தேவையைத் தள்ளிவிட்டு மேற்கு நாடுகள், இஸ்ரேலுக்கு ஆயுதங்களை அனுப்பிக் குவிப்பதில் சளைக்கவே இல்லை. இஸ்ரேலுக்கு ஏற்கனவே இருந்த ஆயுதப்பெருக்கம் இதனால் இரட்டிப்பாகி, அந்தக் கர்வம் இஸ்ரேலியர்களின் தலைகளைக் கனக்க வைத்துவிட்டது. மேலும் அவர்கள், மேற்கத்தியர் எங்கள் இனம்—அவர்கள் உதவி எங்களுக்குத்தான் என்று பகிரங்கமாகப் பிரகடனிக்கவும் ஆரம்பித்துவிட்டனர்—இது 450 லட்சம் அரேபியர்களையும் குன்னவைத்துவிட்டது.

எகிப்துக்கு ஓரளவு உடனே ஆயுத வினியோகம் செய்வதாய் பிரிட்டனும், பிரான்சும் வாக்களித்தன. அந்த வாக்களிப்பு ஒப்பந்தமாகவும் ஆயிற்று. ஆயுதங்களுக்காகப் பணமும் கொடுத்தோம். ஆனால் ஒப்பந்தத்தை பிரான்சும், பிரிட்டனும் செயல்படுத்தவில்லை—நாங்கள் கொடுத்த பணத்தையும் நிராகரித்து விட்டன.

வட—ஆப்பிரிக்காவில் பிரான்சு ஆதிக்கம் அரபு இனத்தார்களை நசுக்கி வருவதை நாங்கள் கண்டித்து, வட ஆப்ரிக்க மக்களை ஆதரித்தோம். இதனால் பிரான்சுக்கு எங்கள்மீது ஏகக் கோபம்! எனவே எங்களுக்குச் செய்து கொடுத்த ஒப்பந்தத்தை மீறி எங்களுக்குத் தருவதாய் வாக்களித்த ஆயுதங்களோடு, மேலும் ஏராளமான ஜெட் விமானங்களையும் சேர்த்து இஸ்ரேலுக்கு வினியோகித்து விட்டது.

இதன்மூலம் மத்திய கிழக்கில் ஒருதரப்பிடம் ஆயுத வலிமை அளவுக்குமீறிப் பெருகுகிறது என்பதை யுணர்ந்தும் கூட எகிப்து, பிரான்சை எதிர்த்து எவ்வித அறிக்கையும் இதுவரை விடுத்ததில்லை—அது பிரான்சின் விருப்பம் என்று பேசாது விட்டுவிட்டோம்.

பிறகு செக் நாட்டைக் கேட்டோம்—கொடுத்தார்கள்—வாங்குகிறோம். இது தவறு என்கவோ இதில் தலையிட்டுத் தடுக்கவோ எந்த நாட்டிற்கேனும் உரிமையுண்டா? உலகமே சிந்திக்கட்டும். சொந்த நாட்டின் ஒரு பகுதியில் பயங்கரமான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கையில் பெரும் பகுதிக்குச் சொந்தமான ஒரு நாடு, **காத்திருக்கும்** கொள்கையைக் கடைப்பிடித்துக்கொண்டிருக்குமா? அவ்வளவு பாவாடைத்தன்மையில் இன்றைய எகிப்து இல்லை என்பதை மேற்கு நாட்டினருக்கு அறிவுறுத்துகிறேன்.

கோபக்காரர் மகள்!

காந்தி மகாத்மா, அவரது தலை வாரிசு பண்டித நேரு—இருவரும் பச்சை அஹிம்சாவாதிகள்; சாந்த சொரூபிகள்; சாத்வீகிகள்!

ஆனால் இந்த இருவரையும்போல கோபக்காரர்கள் உலகிலேயே அருமை. எடுத்ததற்கெல்லாம் கோபம் கொந்தளித்துவிடும் இவர்களுக்கு...ஆனால் அஹிம்சையின் வாரிசுகள்—பிரச்சாரம் அப்படி!

இவர்கள்தான் இப்படி என்றால் இவர்களின் ஆபீஷியல் வாரிசுகளும் அசல் எசன்சுதான்!

திருமதி இந்திராகாந்தி [நேருவின் மகள்தான்] இருக்கிறாரே, அவர் நாகர்கோவிலுக்குப் போனார்—அங்கே பாவம்! பள்ளி மாணவிகள் ஆசைப்பட்டு, பெண்—அதிலும் நேருவின் மகள்—என்பதற்காக, பெரிய பெரிய மலர்மாலைகளைக் கொண்டுபோனார்களாம்—இந்திராவின் கழுத்தில் போட்டு, தம் அன்பையும், ஆர்வத்தையும் மெய்ப்பிக்க!

என்னதான் பெண்ணாக இருந்தாலும் நேருவின் மகளல்லவா! கோபம் வந்துவிட்டது! எனக்கு என் கழுத்தில் மாலை போடுகிறீர்கள் என்று அந்த மாணவிகள்மீது வெடுக்கென்று விழுந்து மாலைகளைப் பறித்துக் கொண்டாராம்.

தமது அன்பை மாலையணிவிப்பின் மூலம் காண்பிக்க வந்த மாணவிகள் முகச்சுழிப்போடு மாலைகளை நேரு மகளின் கையில் கொடுத்துவிட்டுத் திரும்பிவிட்டார்களாம்.

நாகரீகத்தின் லட்சணமும், அபிமானத்தின் நியதியும் இந்தியப் பிரதமரின் மகளிடம் புரளுகிற அழகு எப்படி இருக்கிறது? பாருங்கள்.

தமிழர்களுக்கு இன்னும்வரவேண்டிய புத்தி எவ்வளவோ பாக்கி இருக்கிறது.

யாருக்கு என்ன மரியாதை செய்ய வேண்டும் என்பதையே அவர்கள் இன்னும் சரிவரத் தெரிந்துகொள்ளவில்லை.

● தமிழ்க்குலத் தெய்வமான தில்லை நாதனின் நடனச்சிலை—அதை வார்த்த சிற்பி அதில் கலையின் எழில் முழுதையும் கொழிக்க வைத்திருந்தான்—ஆன்மீகமும், தெய்வீகமும் அதிசயப் பொலிவுபெற்றுக் குலுங்கிய சபேசனின் உருவச் சிலையை எங்கோ கண்காட்சியில் பார்த்ததாக அமெரிக்காவிற்கு அப்பாலிருந்து நேற்று இங்கு வந்த அன்னியர் மாதிரி அலட்சியமாய்ப் பதிலளித்தவர் நேரு. அவர் நமக்கு மனித மாகதம். அவரது மகள்தானே இந்திரா. அது மட்டுமா?

தான் பெற்ற புத்திரிகளை, இலங்கையின் 55ம் வருட ராவணனை கொத்தலவாலாவுடன் இடுப்பிணைய ஆடவிட்டு, மேலை நாகரீகத்தைச் சுமங்கலியாகவும், இந்திய நாகரீகத்தை அமங்கலியாகவும்ஆக்கிய சர்வதேசப் புகழ் விஜயலட்சுமியாரின் அண்ணன் மகள்—மருமகள் தானே இந்திராகாந்தி!

இவருக்குக் கொண்டுபோய், இந்தியப் பண்பான மலர்மாலையை அணிவித்தால், மேலை நாகரீகத்தில் நனைந்து குளிரேற்றிக்கொண்டிருக்கும் இந்திராக்காந்திக்கு உஷ்ணம் ஏறாமலிருக்குமா?

அவருக்குப் பிடித்தது எதுவோ அதைச் செய்ய வேண்டும்.

● கட்டித் தழுவுவது—கைமுத்தமிடுவது—முதுகை வருடி விடுவது—இதெல்லாம் மேலை நாகரீகம்.

இதில் ஊறியவர்களை எப்படி வரவேற்பது—எப்படி அன்பைக் காட்டுவது—என்பதைத் தெரிந்து கொள்ளாமல், அவரிடம் போய் இந்தியப் பண்பை வெளியிட்டால், பதிலுக்கு என்ன கிடைக்கும்? கிடைக்கவேண்டியது கிடைத்தது தமிழ் மாணவிகளுக்கு!

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

அத்தனைபேரையும் ஐரோப்பாவில் படிக்கவைத்து உலகப்புகழில்குளிக்க வைத்த நேதாஜியின் குடும்பத்தார், அவரது மனைவியையும், மகளையும் வளர்த்து வாழ்விக்க வக்கிழந்து விட்டார்கள் என்று நேரு கருதுகிருரா?

அல்லது இன்றையச் சூழ்நிலைக்கு நேதாஜியைவிட அவரது கற்பனை மனைவி—மகள் பிரச்சினையில் பிரச்சார முக்யத்வமிருக்கிறது என்ற பிரிட்டானிய மோஸ்தர் ராஜதந்திரமா?

இதில் கொப்பளித்துள்ள பலரகப் புரட்டுகளை மக்கள் தெரியவொட்டாமல், நேருவின் ராஜதந்திரமோ, செல்வாக்கோ வேடுகட்டிவிட முடியுமா?

இதுவும் போக,

நேதாஜிபற்றியசெய்தி கடந்த பத்து வருடங்களாய் இப்படி முக்குளித்து முக்குளித்து எழும்புவதின் மர்மமும் மக்களுக்கு விளங்கவில்லை.

இதுவரை அச்செய்தி இந்தியாவில் ஒரு கட்சியின் சம்பந்தப்பட்டதாக இருந்தது. இப்பொழுது வெளிநாடுகளிலிருந்து கிளம்புகிறது.

ஆளுக்கொரு விதமாய் வெளியிடுகிருர்கள்.

ஜப்பான் அரசாங்கச் செய்தியே பல உருவமெடுத்துவிட்டது.

அரசாங்கம் ஒன்றும், ஸ்தானிகர் ஒன்றும், ராணுவத்தினர் ஒன்றுமாக கூறிவருகிருர்கள்.

இதில் எது நிஜம் என்பதையா நேரு நிச்சயப்படுத்திக்கொள்ள இதைவேண்டாமா?

நேதாஜியின் செய்தி இந்தியாவிலிருந்து கிளம்பியது போதும், இனி வெளி நாட்டிலிருந்து கிளப்பி இந்திய சர்க்காரின் மனோநிலையைச் சோதிக்க ஜப்பான் அரசாங்கம் இதன்மூலம் வேலை செய்கிறதோ என்று கருதத் தோன்றுகிறது !

நேதாஜி இறக்கவில்லை என்று இறந்துபோனதாகச்சொன்ன ஹபிபுர் ரஹ்மான்-நீதிபதி பால்-டால்

மியா சேட்—கல்கத்தா எம். எல். ஏ.க்கள்—கார்பொரேஷன் உறுப்பினர்கள் பசும்பொன் தேவர்—இன்னும் எவரெவரோ நேதாஜி சாகவில்லை என்று கூறிவிட்டார்கள்—கூறியும் வருகிருர்கள். இவர்களில் ஒருவரேனும் சாதாரணப் புள்ளிகளல்ல. மிகப்பெரிய மனிதர்கள். இவர்களில் தென்னாட்டைப் பொறுத்தவரை பசும்பொன் தேவரவர்கள் நேதாஜி சாகவில்லை என்று ஒரே உறுதியில் கூறிவருகிருர்கள். இவர் சாதாரண மனிதர் அல்ல. ஒரு காலத்தில் விலாசத்தையே இழக்கவிருந்த தமிழ்நாடு காங்கிரசைக் காத்து இன்றையப் பிரகாசத்திற்கு விட்டுவிட்டு ஒதுங்கி நிற்பவர். தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த அபிமானத்தைப் பெற்றவர் என்பதோடு வடநாட்டு மக்களிடம் தென்னாட்டுப் போஸ் என்ற விசேட மரியாதையையும் பெற்றவர். இன்று தமிழ்நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களில். நாணயத்தையும், அரசியலில் புனிதத்தையும் பரப்பும் பணியைக் கையாளும் ஒரே தலைவர் பசும்பொன் தேவர்தான், இவர் நேதாஜி சாகவில்லை என்று விடாமற் கூறி வருவதால் இவருடைய செல்வாக்குக்கூடக் கொஞ்சம் தளருகிறது என்று மக்கள் சிலர் சங்கடப்படுகிருர்கள். ஆயினும் தமது புனித சேவையின் மூலம் திரண்ட செல்வாக்கையே நேதாஜிக்காக பணயம் வைத்துவிட்டு நேதாஜி உயிரோடிருக்கிருர் என்று விடாப்பிடியாகக் கூறிவருகிருர்.

இவருடைய தரம், சந்தர்ப்ப சேர்மானம் அல்ல—நிரந்தரமானது—என்றைக்கும் உத்தரவாதமானது.

இதில் எவருமே வேறுபட முடியாது, இவருடைய தரத்திற்கு உத்திரவாதமும், உண்மைப் பொலிவும் இருக்கும்போது, அவர் நேதாஜி குறித்துக் கூறுவதற்கும் உத்திரவாதமும், உண்மையும் இருந்தாகவேண்டும் என்பது சர்வ நிச்சயம்.

இவர் எங்கும் போகவில்லை, இங்குதானிருக்கிருர். இவரோடு, நேதாஜி பற்றிக் கூறுகிற இதரர்களும் இன்னும் உயிரோடு இந்தியாவில்தான் இருக்கிருர்கள். அவர்களை எல்லாம் அதிகாரபூர்வமாய் அழைத்து, நேதாஜி உயிரோடிருக்கிருர் என்று கூறுவதற்கான ஆதாரம் என்ன என்று பகிரங்கமாக விசாரித்தால் என்ன? நேரு சர்க்கார் இதைச் செய்யலாமா கூடாதா?

நிச்சயம் நேரு இதற்கு உடனடியாக ஒரு ஏற்பாடு செய்து மக்களின் குழப்பத்தைத் தெளிவிக்கவேண்டும்.

இனியும் காலந்தாழ்த்தி, இடையிடையே நேதாஜிபற்றிய செய்திகளை வெளியிட்டு வந்தால், அது நேதாஜியின் மரணச் செய்தியில்த்தான் நேரு சர்க்கார் உயிர்வாழ்கிறது என்று மக்களைத் தீர்மானிக்கவைத்துவிடும்.

நேதாஜி உயிரோடிருக்கிருர் என்று சொல்பவர்கள் எவருமே நேதாஜியின் பெயரைச் சொல்லி வயிறு வளர்க்காதவர்கள்! ஆகவே நேதாஜி இறந்துவிட்டார் என்ற செய்தியை வைத்து நேரு சர்க்கார்தான் வாழ்கிறது என்று முடிவு மககள் வட்டாரத்தில் ஏற்படத்தான் செய்யும்.

உயர்தர
வெண்ணெய்-நெய்
காபிபவுடருக்கு
கிருஷ்ணா ஸ்டோர்ஸ்,
மேலாவணிமூலவீதி, மதுரை.

செந்தமிழ் நாட்டுச் செல்வச்
சிறுவர்களுக்கு திடகாத்திர
மளிக்கும் சிறந்த உணவு
ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
ஸ்தாபிதம்: 1926
நேம் அன் டிசைன் ரிஜிஸ்டர்டு
நிர். 143106
போன் நிர். 334.
திண்டுக்கல் ரோடு—மதுரை
கிளை:மெயின் ரோடு திண்டுக்கல்.

:—: சாக்கடை 'சங்கப்பலகை'யில் சல்லி அண்ணாமலை

❊ தமிழரசுக்கழகத்தின் பிட் நோட்டீஸ் என்ற தரத்தை வகிப்பதற்குக்கூட லாயக்கற்ற ஒரு பத்திரிகை

— அல்ல, அல்ல. —

❊ உதப்பிய புகையிலையை மடித்து வீசி எறிய உதவுகிற ஒரு கக்கூஸ்புறக் கந்தல் காகிதம்!

❊ ....அதற்குரிய சல்லி அண்ணாமலை.........

29—9—55 காலை 10மணி இருக்கும், வழக்கம்போல் வந்த கடிதங்களில் கார்டுகளை மட்டும் தனியாக எடுத்துப் பார்த்துவிட்டு கவர்களைப் பிரித்தோம். அவைகளில் ஒன்றை நமது ஆபீஸ் பையன் பிரித்திருக்கிறான்—அதைப் படித்துமிருக்கிறான், உடனே அவனுக்கு ஆவேசம் வந்துவிட்டது—ஐந்தடி உயரத்துக்குத் தவ்விக் குதித்துவிட்டு, கொஞ்சமும் மரியாதையின்றி மேஜையை ஒரு குத்துக் குத்தினான். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது—பயந்தும் போனேன். என்னதான் ஆபீஸ் பையனாக இருந்தாலும் ஆவேசம் வந்துவிட்டவனல்லவா—பயந்து விட்டேன்.

கொஞ்ச நேரம் அவன் போக்கில் விட்டுவிட்டு பிறகு என்னப்பா என்றேன்.

ஒன்றுமில்லைசார்—இதைப்படியுங்கள் என்றான்,

விஷயத்தைச் சொல் என்றேன்—விழிகளை விரித்துக் கையை ஓங்கினான்.—அதிர்ந்துவிட்டேன்.

படியுங்கள் சார் என்றான்—பதில் பேசாமல் கடிதத்தில் கண்களை ஓட்டினேன்.

அதில் ஓடியிருந்ததுதான் மேலேயுள்ள தலைப்பும் அடுத்துத் தொடர்ந்துள்ள வரிகளும்.

அந்தக் கடிதம் ஒன்பது பக்கம் அரை வளர்ந்திருந்தது—அனலடிக்கப்பட்ட சொற்களால்! அது அவ்வளவும் மாநிலம் மேயும் தமிழரசுக்கழகத்தின் தடிப்பெருந் தலைவர்—சின்னத்தனத்தின் சின்னம்—சின்ன அண்ணாமலையின் பூர்வோத்திர விவகாரமாக இருந்தன,

இதெல்லாம் ஏன் என்று விளங்கவில்லை. அக்கடிதத்தின் கடைசி வரியில் 25—9—55 சங்கப் பலகையைப் பாருங்கள் என்று குறிப்பிட்டிருந்தது,

தலையை நிமிர்த்தேன், நமது ஆபீஸ் பையன் சங்கப்பலகையைப் படித்துக்கொண்டிருந்தான், கொடப்பா என்றேன், ஒரு கட்டைத் தூக்கிப்போட்டுவிட்டு அவன் படித்துக்கொண்டிருந்தான். கட்டைப் பிரித்தேன், அதிசயமாக இருந்தது! அந்தக் கட்டில் மாற்றுப் பிரதிகளாக வந்திருந்த 9 இதர பத்திரிகைகள் போக எஞ்சிய எல்லாம் (94பிரதிகள்) சங்கப்பலகையாக இருந்தன. பல ஊர்களிலிருந்தும் பல அன்பர்கள் அப்பிரதிகளை வாங்கி நமக்கு அனுப்பி விட்டிருக்கிறார்கள்; ஒன்யைப் பிரித்துப் படித்தோம். அதன் கடைசிப் பக்கத்தில் **நமது பார்வையில் இவர்** என்ற தலைவரியின்கீழ் திரு. உ. முத்துராமலிங்கத்தேவரவர்களைப் பற்றி எழுதியிருந்தது-

சின்ன அண்ணாமலைக்கு வந்த திடீர்க் கேடு என்ன? என்று நினைத்துக்கொண்டே படித்ததில் திரு. உ. முத்துராமலிங்கத்தேவரவர்களை அப்படி இப்படி எல்லாம் புகழ்ந்து, இடையிலே இகழ்ந்து, முடிவில் அவர் தமிழரசுக் கழகத்தில் சேர்ந்துவிட்டால் தமிழ் நாட்டிற்கு நல்லது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பிறகு எமக்கும் ஒரு பரபரப்பும் துடிதுடிப்பும் ஏற்பட்டது. எல்லாக் கடிதங்களையும் பிரித்தபோது, அத்தனையும் அதுபற்றியே இருந்தன.

கட்சி வித்தியாசமின்றி எல்லாக் கட்சியினருமே, காங்கிரஸ்காரர் உள்பட சீர் குறுகிய சின்ன அண்ணாமலையைத் தாறுமாறாகத் தாக்கியும் கண்டித்தும் எழுதியிருந்தனர். மேலேயுள்ள முதற்கடிதத்தை எழுதியிருப்பவர் ஒரு தமிழரசுக் கழகத்தவர் என்றால் நீங்கள் அதிசயப்படுவீர்கள். அவருக்கே அடக்கமுடியவில்லை, தேவரவர்களைப்பற்றி சின்ன அண்ணாமலை எழுதியிருந்தவை — எழுதிவிட்டார். சமயம் வரும்போது அவர் பெயரை வெளியிடுவோம். ஆனால் அந்த அன்பர் நாகர்கோவில் முகாம் என்று அக்கடிதத்தில் கண்டிருந்தார்.

வேறு பல அன்பர்கள் மிக மிக ஆவேசத்தோடு எழுதியிருக்கின்றனர்

அதற்குப் பதில் எழுதவேண்டுமென்று பல நண்பர்கள் நமக்கு மிக

[16ம் பக்கம் பார்க்க]

நம்பிக்கை பூர்வமானவை :



வருகை புரியுங்கள்!

திருப்தியோடு —

— திரும்புவீர்கள்!

❊

தி அமெரிக்கன் ஆப்டிகல்
— கம்பெனி —
(பதிவு செய்யப்பட்டது.)

7, டவுன்ஹால் ரோடு,
மதுரை.

[15ம் பக்கம் தொடர்ச்சி]

நெருங்கிய தமிழரசுக் கழக உறுப்பினர்கள் உள்பட நேரில் வந்து சொல்லிச் சென்றனர்.

அதற்குப் பதிலெழுதிப் பக்கத்தை வீணாக்க நாம் விரும்பவில்லை.

ஏனெனில்.

அந்த நபரின் லட்சணத்தைப் பார்த்துத்தான் ராஜகோபாலாச்சாரி நிரந்தரமாகவே சின்ன தாக்கி வைத்துவிட்டார்.

அதோடு சிலேட்டுக்குச்சி பிடித்து படம்—பட்டம் எழுதவே தடுமாறும் அந்த தமிழரசுக் கழகத் தட்டிவிட்டான் சண்டியர், பேனாப் பிடிக்க ஆரம்பித்தால் அது எப்படி இருக்கும்?

இந்த அண்டர் குவாலிடி அறிஞர், முன்பு 'கல்கி'யில் பிரசுரிக்க கதை எழுதிக் கொடுப்பார். அதைக் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி படிப்பார்—படித்துவிட்டு அண்டர் குவாலிடி அறிஞர் அண்ணாமலை எழுதிய கதையில் உள்ள அத்தனை வரிகளையும், (சின்ன அண்ணாமலை என்ற பெயரை மட்டும் விட்டுவிட்டு) வெட்டிவிடுவார். பிறகு கல்கியே கதை எழுதி அது சின்ன அண்ணாமலை பெயரால் கல்கியில் வெளிவரும்.

இந்த இரவல் காம்புதான் இன்று தமிழரசுக் கழகத்திற்கு விழுது!

அதாவது: **கூஜா!** லட்சணம் எப்படியிருக்கும்?

இந்தச் சின்னக் கூஜா பேனா பிடிக்கும் தரத்திற்கு வர, இரண்டு தலைமுறைகளுக்கு பசும்பொன் தேவரின் கட்டுத் தறியில் கட்டிக்கிடக்கிறதுகளுக்கே ஹானரரியாகச் சேவை செய்து தீரவேண்டும், பிறகு எழுதும் தரத்திற்கு வர, எதற்கு, எத்தனை தலைமுறைவரை என்ன செய்யவேண்டுமென்பதை எவரும் எளிதில் விளங்கிக்கொள்ளலாம்!

இந்தத் தரம்மாறி நபர் தேவரவர்களை தமிழரசுக் கழகத்துக்குள் இழுக்க எழுதியிருக்கும் லட்சணமே சொல்லுமே, இந்தச் சல்லியை மட்டுமல்ல, மீசைப் பெரியார் ம. பொ. சி. யையும் சேர்த்து!

பல வைப்புகளிலிருந்து, பல ருசிகளை அறிந்து, கழிசடைத்தனத்தில் காய்ப்பேறிய இந்த இற்றுப்போன காம்புதான், ம. பொ. சி. க்கு குதிநரம்பாகப் பயன்படுகிறது என்றால் அதன் பேனா கக்கிய கருத்துக்கு என்ன இருக்கிறது, விலை—பதிலெழுத?

இந்தக் காலோடியின் வாலாட்டம் தமிழரசுக் கழகத்தோடு நின்றால் நல்லது. இல்லை—வால் நீளமாகிவிட்டது—கொஞ்சம் குறையவேண்டுமென்று விரும்பினால் வேறு இடத்தில் நீட்டட்டும் என்று மட்டும் திரு. ம. பொ. சி. க்குச் சொல்லி வைப்பதோடு நாம் இதை முடித்துக்கொள்வோம்.

இந்தக் கயமைநாதனின் கத்துக்குட்டிப் பேச்சிலும் எழுத்திலும் வளர நினைக்கிற எந்த இயக்கமும் பல்லாங்குழித்தரத்துக்கு இப்பால்தான் நிற்க முடியும் என்பதையும் அந்தக் கயமைநாதனுக்கு நிழல் கொடுக்கும் கழகத்துக்கு அறிவுறுத்துகிறோம்.

முடிவாக,

நமக்குக் கடிதமெழுதிய நண்பர்களுக்கு நன்றி. ஆனால், அவர்களின் ஆவேசத்திற்கு வருத்தம். ஏனெனில் இந்தச் சல்லியின் செல்லாச் சொல்லுக்காக இவ்வளவு ஆவேசமடைந்ததால் சில பத்து சங்கப்பலகை பத்திரிகையை வாங்கிவிட்டீர்கள். அத்தனை இரண்டணாவும் வீண். அதன் பலன் அண்ணாமலையின் பத்திரிகை அந்த வாரத்தில் கூடக் கொஞ்சம் விற்றதுதான்.

தேவரவர்களைப்பற்றி எழுத இந்த ஓடிந்த பேனாத்தானா தகுதி? இனி இதற்காக ஒரு சல்லியையும் செலவிட வேண்டாம். வேண்டுகிறோ சாக்கடையிலிருந்து சந்தணம் ம காது. தூர்வாடைதான் அடிக்கு அதற்கு நாம் கவலைப்படுவானேன்?

(10ம் பக்கம் தொடர்ச்சி]

பலர் அதைத்தெரிந்துகொள்வதில்லை சிலர் அதைத் தெரிந்துகொண்டு ஆவன செய்து பேராபத்தைத் தாங்க நெஞ்சைத் திடம் செய்து கொள்ளுகிறார்கள்.

அணைந்த நெய்விளக்கு பெருங்காற்றினால் என்றாலும் அது கங்காதரருக்கு வரும் ஏதோ ஒரு துன்பத்திற்கு அறிகுறிதான் என்ற எண்ணிவிட்டார்,

முதன் முதல் அவர் நினைத்தது சோமநாதரைத்தான், பிறகுதான் தூரதேசத்தில் படித்துக் கொண்டிருக்கும் மைந்தன் ராஜாவை நினை தார். ஆனால் 'அவனுக்கு என்ன ஆபத்துவரலாம்? அமெரிக்காவி தானே அந்தப் பெரிய நீர்வீழ்ச்சி இருக்கிறது! நயகரா? அதை வேடிக்கை பார்க்கப்போய்...? ரஸ்தாவைக் கடக்கும்போது? சே...அப்படியெல்லாம் ராஜா போகமாட்டான். விதி... அதன்முன் நாம் என்ன செய்ய முடியும்? தங்கவயல் கிராமத்தில் க தடுக்கி கீழே விழுந்து உயிர் துறந்தா லும் விதிதானே, எல்லாவற்றிற்கும் காலையில் அமெரிக்காவுக்கு 'டிரங்' செய்வோம்" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டு படுக்கையில் போய் படுத்தார். (தொடரும்

நாவின் ருசிக்கும், சுகாதார விதிக்கும் ஒத்துக்கொடுக்கும் வகையில்
சிற்றுண்டிகளைத் தயாரித்தளிக்கும் சிற்றுண்டிச்சாலை
மதுரை நகரின் மத்திய வட்டாரத்தில்

ஒன்றே ஒன்றுதான்!

அதுதான்

எஸ். எஸ். கபே

(பிராமணாள் காபி ஹோட்டல்)
(அம்மன் சன்னதி காந்தி சிலைக்கு எதிரில்)

உரிமையாளர்:— எம். எஸ். சாமிநாதய்ய

வெளியிட்டதும், ஆசிரியரும் ஆர். சக்திமோகன் (ராகவன்) அச்சிட்டது: விஜயா பிரிண்டர்ஸ் லிமிடெட், டவுன் ஹால் ரோடு-கண்ணகி அலுவலகம். 80, மேல ஆவணிமூலவீதி மதுரை.

SEP 1958